# நாணயக் கொள்கை அறிக்கை

2024 ஓகத்து




ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

© இலங்கை மத்திய வங்கி

ISBN 978-624-5917-59-4

2024 ஓகத்து 15

# உள்ளடக்க அட்டவணை


**இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு .................................... 4**

**சுருக்க அறிக்கை ..................................................................................... 6**

**1. நாணயக் கொள்கைச் சுருக்கம் ..................................................................... 8**

**2. பணவீக்கம் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு ............................................. 9**

**2.1. அடிப்படை எதிர்வுகூறல் ........................................................................ 9**

பணவீக்கத்திற்கான வாய்ப்புக்கள் ........................................................................... 9

*சிறப்புக்குறிப்பு அ: நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழான பணவீக்க இலக்கு* ............................................................ 15

உண்மைப் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் ........................................... 17

**2.2. எதிர்வுகூறலுக்கு அடிப்படையாகவிருக்கும் முக்கிய எடுகோள்கள் ........................ 18**

உலகளாவிய சூழல் ............................................................................................. 18

இறைப் பாதை .................................................................................................. 19

வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு ....................................................................... 19

**2.3. பணவீக்கம் மற்றும் பொருளாதார வளர்ச்சி எறிவுகளுக்கான இடர்நேர்வுகள் .......... 19**

பணவீக்க எறிவுகளுக்கான இடர்நேர்வுகள் ............................................................. 20

பொருளாதார வளர்ச்சி எறிவுகளுக்கான இடர்நேர்வுகள் ........................................... 21

**2.4. முன்னைய எதிர்வுகூறல்களுடனான ஒப்பீடு ................................................. 23**

நடுத்தர கால எறிவுகளுக்குப் பயன்படுத்தப்படும் முக்கிய எடுகோள்கள் ........................ 23

பணவீக்கப் பாதை ............................................................................................. 23

**3. தற்போதைய பொருளாதார அபிவிருத்திகள் ..................................................... 26**

**3.1. பணவீக்கம் ........................................................................................... 26**

**3.2. உண்மைத் துறை .................................................................................... 29**

**3.3. நாணயத் துறை ...................................................................................... 32**

வட்டி வீதங்கள் ................................................................................................. 32

உள்நாட்டுப் பணச் சந்தை திரவத்தன்மை ................................................................ 34

உள்நாட்டு கொடுகடன் நிலைமைகள் மற்றும் பண நிரம்பல் ........................................ 34

**3.4. வெளிநாட்டுத் துறை ................................................................................ 38**

சென்மதி நிலுவை ............................................................................................... 38

செலாவணி வீதம் ................................................................................................ 40

ஒதுக்குச் சொத்துக்கள் ........................................................................................ 41

**3.5. இறைத் துறை ........................................................................................ 42**

**3.6. நிதியியல் துறை ..................................................................................... 45**

**3.7. உலகளாவிய அபிவிருத்திகள் ..................................................................... 47**

# இலங்கை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் கீழ், விலை உறுதிப்பாட்டை அடைதலும் பேணுதலும் இலங்கை மத்திய வங்கியின் முதன்மை குறிக்கோளாக காணப்படுகின்றது. பணவீக்கத்தை தாழ்ந்த மற்றும் நிலையான மட்டங்களில் பேணுவதன் மூலம் மத்திய வங்கியானது நிலைபெறத்தக்க பொருளாதார வளர்ச்சிக்கும் பொது மக்களின் பொருளாதார மற்றும் நிதியியல் நலனோம்புகைக்கும் பங்களிப்புச் செய்கின்றது.

மத்திய வங்கியானது அதன் முதன்மை குறிக்கோளான உள்நாட்டு விலை உறுதிப்பாட்டைப் பேணுவதலை அடையும் பொருட்டு நாணயக் கொள்கையை நடாத்துகின்றது. இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம், நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்துசெல்லும் விதத்தில் நாணயக் கொள்கையை உருவாக்குதல் மற்றும் நெகிழ்வான செலாவணி வீத முறைமையொன்றை நடைமுறைப்படுத்தலுக்கும் நாணயக் கொள்கைச் சபை பொறுப்பாகவுள்ளது. நெகிழ்ச்சித்தன்மை வாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பானது நிதி அமைச்சு மற்றும் மத்திய வங்கிக்கிடையிலான நாணயக் கொள்கை கட்டமைப்பு உடன்படிக்கையினால் நிர்ணயிக்கப்பட்டவாறு இலக்கிடப்பட்ட மட்டத்தில் பணவீக்கத்தைப் பேணுவதை இலக்காகக் கொண்டுள்ளது. 2023 ஒத்தோபர் 5ஆம் திகதியன்று அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட தற்போதைய நாணயக் கொள்கை கட்டமைப்பு உடன்படிக்கையானது காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தை 5 சதவீதத்தில் பேணுவதற்கு மத்திய வங்கியை கட்டாயப்படுத்துகின்றது.[1]

பணவீக்க இலக்கினை அடைவதற்கு, குறுகிய கால சந்தை வட்டி வீதங்களை விரும்பத்தக்க பாதையில் வழிநடாத்துவதற்கு மத்திய வங்கி அதன் கொள்கைச் சாதனங்களைப் பயன்படுத்துகின்றது. துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் மத்திய வங்கியின் கொள்கை வட்டி வீதங்களாக செயற்படுகின்றன. துணைநில் வைப்பு வசதி வீதமும் துணைநில் கடன்வழங்கல் வசதி வீதமும் பணச் சந்தையில் ஓரிரவு வட்டி வீதங்களை வழிநடாத்துவதற்கு வட்டி வீத வீச்சொன்றை உருவாக்குகின்றன. குறுகிய கால சந்தை வட்டி வீதமான சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் தற்போதைய நாணயக் கொள்கை கட்டமைப்பின் கீழ் தொழிற்பாட்டு இலக்காகச் செயற்படுகின்றது. நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்கமைவாக பேணப்படும் ஓரிரவுச் சந்தை வட்டி வீதங்கள் நிதியியல் சந்தைகளினூடாக பொருளாதாரத்திற்கு ஊடுகடத்தப்பட்டு இறுதியில் பணவீக்கத்தை பாதிக்கின்றன.

நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் தரவால் உந்தப்பட்டவையாகும். நாணயக் கொள்கை நடவடிக்கைகள் பணவீக்கத்தில் அதன் முழுத் தாக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு காலமெடுக்கும் என்பதால் நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் முன்னோக்கிய பார்வையுடையனவாக இருத்தல் வேண்டும். பொருத்தமான நாணயக் கொள்கை நிலை தொடர்பில் தீர்மானிப்பதற்கு மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபை ஆண்டிற்கு ஆறு தடவைகள் கூடுகின்றது. நாணயக் கொள்கைத் தீர்மானங்களை மேற்கொள்கின்ற போது, நாணயக் கொள்கைச் சபையானது பணவீக்கத்தையும் பணவீக்கத் தோற்றப்பாட்டையும், கிடைக்கக்கூடிய தரவுகள், எதிர்வுகூறல்கள், மற்றும் இடர்நேர்வுகள் அத்துடன் இவ்வகையான எதிர்வுகூறல்களை சுற்றியுள்ள நிச்சமற்றத்தன்மைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்தின் நிலையையும் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாட்டையும் மதிப்பீடு செய்கின்றது. ஆளுநர் தலைமையிலான உள்ளக தொழில்நுட்பக் குழுவான நாணயக்

[1] பணவீக்க இலக்கானது மக்களிற்கு 2352/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் தெரிவிக்கப்பட்டது. காலாண்டு முதன்மைப் பணவீக்கம் என்பது தொடர்புடைய காலாண்டின் மூன்று மாதகாலப்பகுதியில் மாதாந்த கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றத்தின் எளிய சராசரியைக் குறிக்கின்றது.

கொள்கைக் குழுவானது மிகக்கவனமான பரிசீலனைக்குப் பின்னர் நாணயக் கொள்கைச் சபையின் கவனத்திற்கு தொழில்நுட்ப பரிந்துரைகளை வழங்குகின்றது.

நாணயக் கொள்கை அறிக்கையானது மத்திய வங்கிச் சட்டத்தின் 27 மற்றும் 80ஆம் பிரிவுகளை நிறைவேற்றும் வகையில் தயாரிக்கப்பட்டு, நாணயக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதன் குறிக்கோள்களை அடைதல் என்பவற்றுடன் பணவீக்கம், பணவீக்கத்திற்கான மூலங்கள், பணவீக்கத்திற்கான நடுத்தரகால எறிவுகள், அவ் எறிவுகளுக்கான முக்கிய இடர்நேர்வுகள் என்பனவற்றின் சமீபத்திய அசைவுகளை விளங்கப்படுத்தும் விதத்தில் மத்திய வங்கி ஆண்டிற்கு இருமுறை வெளியிடுவதற்கு தேவைப்படுத்தப்படுகின்றது. மேலும், இவ் அறிக்கையானது பொருளாதாரத்தின் ஏனைய பல்வேறு துறைகளின் தற்போதைய அபிவிருத்திகளை பொதுமக்களுக்கு தெரிவிக்கின்ற அதேவேளையில் தொடர்புடைய இடர்நேர்வுகளுடன் கூடிய பொருளாதார வளர்ச்சித் தோற்றப்பாட்டின் மதிப்பீடொன்றையும் வழங்குகின்றது.

## சுருக்க அறிக்கை

2023ஆம் ஆண்டில் காணப்பட்ட படிப்படியான பொருளாதார உறுதிப்பாட்டுடன், 2024ஆம் ஆண்டில் இதுவரையான காலப்பகுதியில் பொருளாதாரத்தை புதுப்பிப்பதில் இலங்கை கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது. குறிப்பாக அண்மைய வரலாற்றில் எப்போதும் கண்டிராத உயர் பணவீக்க அத்தியாயத்தைத் தொடர்ந்து பணவீக்கம் குறைவாக உள்ளமையானது, வாழ்வாதாரங்கள் மற்றும் வணிக நடவடிக்கைகளுக்கு சில ஆறுதலையும் உறுதிப்பாட்டையும் வழங்குகின்றது. உள்நாட்டு பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்து மீட்சியடைந்து வருகின்றன. மென்மையான பணவீக்க அழுத்தங்களுடன் ஒத்திசைவாகும் வகையில் மத்திய வங்கியின் நாணயக் கொள்கை நிலைப்பாடு தொடர்ந்தும் தளர்வானதாக காணப்படுகின்றது.

வரிச் சீராக்கங்களின் காரணமாக 2024ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உயர்வாக காணப்பட்ட முதன்மை பணவீக்கம், அதன்பின்னர் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்து காணப்பட்டது. மின்சார கட்டணங்கள், எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகள் என்பவற்றின் கணிசமான கீழ்நோக்கிய திருத்தங்கள், அத்துடன் உணவு பணவீக்கத்தின் மெதுவடைதல் ஆகியவை குறைந்த பணவீக்கத்திற்கான அண்மைய நகர்வினை விளக்குகின்றன. மேலும், அதிக தளர்வுடைய நாணய நிலைமைகள் இருந்தபோதிலும், தாழ்வான செலவிடக்கூடிய வருமானங்களினால் கேள்வி நிலைமை பெருமளவுக்கு மந்தமாகவே இருந்தது. இதன் விளைவாக, 2024 நடுப்பகுதியளவில் பணவீக்கமானது பணவீக்க இலக்கான 5 சதவீதத்தை விட கீழான மட்டங்களிற்கு கணிசமாக குறைவடைந்தது. இருப்பினும், பணவீக்க எதிர்பார்ப்புகள் குறிப்பாக நடுத்தர காலத்திற்கு நன்கு நிலைநிறுத்தப்பட்டுள்ளன.

மின்சார கட்டணங்கள் மற்றும் உள்நாட்டு எரிபொருள் விலைகளிற்கான அண்மைய கீழ்நோக்கிய சீராக்கங்களின் ஒருங்கிணைந்த தாக்கத்தால் பிரதானமாக உந்தப்பட்டு முதன்மை பணவீக்கம் வரவிருக்கும் மாதங்களில் இலக்கை விட குறைவாகவே இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கிணங்க, குறுகிய காலத்தில் காலாண்டுச் சராசரி பணவீக்கமானது நாணயக் கொள்கை கட்டமைப்பு உடன்படிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட பணவீக்க இலக்கிலிருந்தான 2.0 சதவீத புள்ளிகள் எல்லையை விடவும் குறைவாகவே இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. அதேவேளை, நிரம்பல் பக்க குழப்பங்களின் விளைவுகளை நீக்கி அதன்மூலம் பொருளாதாரத்தின் அடிப்படை பணவீக்க போக்கை எடுத்துக்காட்டும் மைய பணவீக்கமானது குறுகிய காலத்தில் முதன்மை பணவீக்கத்தை விட உயர்வாகயிருக்குமென எதிர்பார்க்கப்பட்டாலும் முதன்மை பணவீக்கத்தை விட ஒப்பீட்டளவில் குறைந்தளவிலான தளம்பல்களுடைய பாதையைப் பின்பற்றுமென எறிவுசெய்யப்படுகிறது. மேலும், நிரம்பல் பக்க காரணிகளின் விளைவுகள் படிப்படியாகக் குறையுமென்று எதிர்பார்க்கப்படுவதுடன் பொருத்தமான கொள்கை நடவடிக்கைகளால் ஆதரவளிக்கப்பட்டு முதன்மை பணவீக்கம் 2025 நடுப்பகுதியில் உத்வேகமடைந்து பின்பு நடுத்தர காலத்தில் இலக்கு மட்டத்தில் உறுதிப்படுத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

2024ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாணயக் கொள்கை தளர்த்தல் தொடர்பில் எச்சரிக்கையான அணுகுமுறையை மத்திய வங்கி மேற்கொண்டது. பணவீக்கம் இலக்கை விட குறைவாக இருந்தாலும் பணவீக்க எதிர்பார்ப்புகள் நிலையானதாக இருந்தாலும் மற்றும் வெளிநாட்டுத் துறை அழுத்தங்கள் மிதமாகயிருந்தாலும், பணவீக்கத்தின் மிதமான தன்மை பெரும்பாலும் நிரம்பல் பக்க காரணிகளால் உந்தப்பட்டது இதற்குக் காரணமாகும். மத்திய வங்கியின் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்கு ஏற்ப 2024 ஆம் ஆண்டின் முதல் பாதியில் சந்தை வட்டி வீதங்கள் தொடர்ந்து கீழ்நோக்கி சீராக்கப்பட்டன.

பேரண்டப்பொருளாதார உறுதிப்பாடு படிப்படியாக மீட்டெடுக்கப்பட்டதோடு பொருளாதாரம் ஒரு வலுவான மீட்சியை அடைந்து, 2023ஆம் ஆண்டின் 3ஆம் காலாண்டு முதல் நேர்மறையான உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியைப் பதிவுசெய்தது. மேம்பட்டுவரும் முதலீட்டாளர் மனோபாவங்கள், தளர்வான நாணய நிலைமைகள் மற்றும் வெளிநாட்டுக் கேள்வி நிலைமைகளில் படிப்படியான முன்னேற்றம் அத்துடன் கடந்த ஆண்டின் பொருளாதார சுருக்கத்தினால் ஏற்பட்ட புள்ளிவிபர ரீதியான தாழ்ந்த தளம் என்பவை இவ் மீட்சிக்கு பங்களிக்கும் முக்கியமான காரணிகளாகும். தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கடன் இன்னும் நீடித்த மீட்சியை ஏற்படுத்தவில்லை. முன்னோக்கிச் செல்கையில் தளர்வான நாணயக் கொள்கை நிலைப்பாடு மற்றும் சந்தை கடன் வட்டி வீதங்களின் தளர்த்தல் ஆகியவை தனியார் கொடுகடனை தூண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. குறுகிய காலத்தில் இலங்கைப் பொருளாதாரத்தின் வளர்ச்சி உத்வேகம் தொடர்ந்து நடுத்தர காலத்தில் படிப்படியாக அதன் உள்ளாற்றலை அடையுமென்று எதிர்பார்க்கப்படுவதோடு இது அரசாங்கம் வளர்ச்சி சார்ந்த கொள்கை சீர்திருத்தங்களை திறம்பட மற்றும் சரியான நேரத்தில் செயல்படுத்துவதில் தங்கியுள்ளது.

பணவீக்க எறிவுகள் தொடர்பான இடர்நேர்வுகளின் சமநிலையைப் பொறுத்தவரை, முதன்மை பணவீக்கம் இலக்கை விடக் குறைவாகவே இருக்குமென எதிர்பார்க்கப்பட்டாலும் உலகளாவிய மற்றும் உள்நாடு தொடர்பில் நிரம்பல் பக்கத்தினால் உந்தப்படும் நிச்சயமற்ற தன்மைகள் காரணமாக குறுகிய காலத்தில் இடர்நேர்வுகள் மேல்நோக்கியவையாகக் காணப்படுகின்றன. மாற்றாக, நடுத்தர கால பணவீக்க எறிவுகள் தொடர்பான இடர்நேர்வுகள் பரவலாக சமநிலையாக காணப்படுகின்றன. உண்மையான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி எறிவுகளைப் பொறுத்தவரை, குறுகிய காலத்திலும் நடுத்தர காலத்திலும் இடர்நேர்வுகள் சமநிலையாக உள்ளன.

*2024 யூலை 24 அன்று மேற்கொள்ளப்பட்ட நாணயக் கொள்கை அறிவிப்புடன் முடிவுறுத்தப்பட்ட இலங்கை மத்திய வங்கியின் 2024 யூலையில் உள்ளவாறான நாணயக் கொள்கைச் சுற்றில் கிடைப்பனவாகவுள்ள முக்கியமான தரவுகளை அடிப்படையாகக்கொண்டு இவ்வறிக்கையின் உள்ளடக்கம் அமைந்துள்ளது.*

# 1. நாணயக் கொள்கைச் சுருக்கம்

2023 யூன் முதல் மேற்கொள்ளப்பட்ட தளர்வான நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்கு இசைவாக அதன் முக்கிய கொள்கை வட்டி வீதங்களை இலங்கை மத்திய வங்கி தொடர்ந்தும் குறைத்துக் கொண்டது. பணவீக்க அழுத்தங்கள் மிதமாக இருந்ததால் 2024இன் இதுவரையான காலத்தில் நாணயக் கொள்கை மேலும் தளர்த்தப்பட்டது.

மத்திய வங்கி 2023ஆம் ஆண்டின் பிற்பகுதியில் தனது கொள்கை வட்டி வீதங்களை மொத்தமாக 650 அடிப்படைப் புள்ளிகளால் கணிசமாகக் குறைத்துக் கொண்டது. மிதமான மொத்த கேள்வி நிலைமைகள், சாதகமான குறுகிய கால பணவீக்க இயக்கவியல், நன்கு நிலைநிறுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் அதிகப்படியான வெளிநாட்டுத் துறை அழுத்தங்கள் இல்லாததால் கொள்கை வட்டி வீதங்கள் மேலும் 50 அடிப்படை புள்ளிகளால் 2024 மார்ச் மாதத்தில் குறைக்கப்பட்டன. இக் கொள்கைச் சீராக்கமானது ஒட்டுமொத்த சந்தைக் கடன் வீதங்களில் தொடர்ச்சியான கீழ்நோக்கிய சீராக்கத்தை தேவைப்படுத்தியது. சந்தை வட்டி வீதங்களைக் குறைக்க வசதியளிக்கும் வகையில் மத்திய வங்கி கொள்கை வட்டி வீதங்களை குறுகிய காலத்திற்கு மாற்றமில்லாமல் பேணியதன் பின்னர் 2024 ஜூலையில் கொள்கை வட்டி வீதங்களில் மேலும் ஓர் குறைப்பை மேற்கொண்டது. பணவீக்கத் தோற்றப்பாடு அழுத்தமின்றி இருப்பதால், தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் தொடர்ச்சியை சமிக்ஞை செய்வதற்கும் சந்தை கடன் வீதங்களின் மேலதிக குறைப்பைத் தூண்டுவதற்கும் 2024 ஜூலையில் கொள்கை வட்டி வீதங்களை 25 அடிப்படை புள்ளிகளால் குறைத்ததன் மூலம் நாணயக் கொள்கை மேலும் தளர்த்தப்பட்டது. இக் கொள்கை நடவடிக்கையானது மந்தமான பணவீக்க அழுத்தங்களுக்கு மத்தியில் பொருளாதார மீட்சியை ஆதரிப்பதற்காக எதிர்வரும் காலப்பகுதியில் நாணயக் கொள்கையை போதுமானளவினால் தளர்வாக பேணும் மத்திய வங்கியின் நிலைப்பாட்டைக் குறிக்கிறது.

நாணயக் கொள்கைச் சபை 2024 செத்தெம்பர் மற்றும் நவம்பரில் கூடி ஆண்டின் எஞ்சியப் பகுதியில் நாணயக் கொள்கை தீர்மானங்களை எடுக்கும்.

**கடந்த நாணயக் கொள்கை அறிக்கையிலிருந்து நாணயக் கொள்கைத் தீர்மானங்கள் (2024 பெப்புருவரி – 2024 யூலை):**

| 2024 மாச்சு | 2024 மே | 2024 யூலை |
|---|---|---|
| கொள்கை வட்டி வீதங்கள் <u>50 அடிப்படைப் புள்ளிகளால்</u> 8.50 சதவீதத்திற்கும் (துணைநில் வைப்பு வசதி வீதம்) மற்றும் 9.50 சதவீதத்திற்கும் (துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம்) <u>குறைக்கப்பட்டன</u> | கொள்கை வட்டி வீதங்கள் 8.50 சதவீதம் (துணைநில் வைப்பு வசதி வீதம்) மற்றும் 9.50 சதவீதமாக (துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம்) பேணப்பட்டது | கொள்கை வட்டி வீதங்கள் மேலும் <u>25 அடிப்படைப் புள்ளிகளால்</u> 8.25 சதவீதத்திற்கும் (துணைநில் வைப்பு வசதி வீதம்) மற்றும் 9.25 சதவீதத்திற்கும் (துணைநில் கடன்வழங்கல் வசதி வீதம்) <u>குறைக்கப்பட்டன</u> |

**நாணயக் கொள்கை மீளாய்வு தொடர்பான ஊடக அறிக்கைகளுக்காக இதிலுள்ள கீயூஆர் குறியீட்டை ஸ்கேன்/ கிளிக் செய்யவும்**

## 2. பணவீக்கம் மற்றும் பொருளாதாரத் தோற்றப்பாடு

பணவீக்கம் மற்றும் உண்மைப் பொருளாதார வளர்ச்சி என்பவற்றின் எறிவுகளை மையமாகக் கொண்டு, 2024 யூலை மாத நாணயக் கொள்கைத் தீர்மானத்திற்கு ஆதரவளிக்கின்ற விதத்தில் மத்திய வங்கியின் அலுவலர்களினால் மேற்கொள்ளப்பட்ட நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகள் இப்பகுதியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.[2] இவ்வெறிவுகள் 2024 யூலை மாத நாணயக் கொள்கைச் சுற்றில் கிடைப்பனவாகவிருந்த தரவுகள், முக்கிய மாறிகளின் அண்மைக்கால எதிர்வுகூறல்கள், உலகளாவிய பேரண்டப்பொருளாதார எறிவுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றைப் பிரதிபலிப்பதுடன் இவ்வறிக்கையில் *அடிப்படை எதிர்வுகூறலாகக்* கருத்திற்கொள்ளப்படுகின்றன.

### 2.1. அடிப்படை எதிர்வுகூறல்


2024 யூலை மாத நாணயக் கொள்கைச் சுற்றின் நடுத்தர கால பேரண்டப்பெருளாதார எறிவுகளின் பிரகாரம், பணவீக்கமானது அண்மைக் காலத்தில் மேலும் மெதுவடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. மின்சாரத் தீர்வைகளிற்கான அண்மைய கணிசமானளவிலான கீழ்நோக்கிய திருத்தங்கள் இதற்கு முதன்மைக் காரணியாக அமைகின்ற வேளையில் குறிப்பாக, 2024இன் இறுதிப்பகுதி மற்றும் 2025இன் முற்பகுதியில் சாதகமான தளத் தாக்கமும் பங்களிப்புச்செய்கின்ற காரணியொன்றாகக் காணப்படும். அதனைத்தொடர்ந்து, முக்கியமாக சாதகமற்ற புள்ளிவிபர தளத் தாக்கத்தினால் முதன்மை பணவீக்கம் 2025இன் இரண்டாமரையளவில் ஓர் தற்காலிக உயர்வினை பதிவுசெய்யுமென்றும் நடுத்தர காலத்தில் இலக்கிடப்பட்ட 5 சதவீத மட்டத்தினை (ஆண்டிற்கு ஆண்டு) அண்மித்துப் படிப்படியாக நிலைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, பொருளாதார வளர்ச்சியில் மீட்சியானது பொருத்தமான கொள்கைகளின் உதவியுடன் நடுத்தர காலத்தில் தொடருமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**பணவீக்கத்திற்கான வாய்ப்புக்கள்**

அண்மைய எதிர்வுகூறல்களின் பிரகாரம், ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது அடுத்த சில மாதங்களில் மெதுவடைதலை கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் இது நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் வரையறுக்கப்பட்டுள்ளவாறு அண்மைக் காலத்தில் காலாண்டுச் சராசரி பணவீக்க மட்டங்கள் 5 சதவீதம் கொண்ட பணவீக்க இலக்கிலிருந்து 2 சதவீத புள்ளிகளை விட கூடுதலாகக் குறைவடைந்து காணப்படுவதற்கு உந்துதலளிக்கக்கூடும். 2024இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் பதிவுசெய்யப்பட்ட காலாண்டுச் சராசரிப் பணவீக்கமும் இலக்கிலிருந்து 2 சதவீத புள்ளிகளை விட கூடுதலாகக் குறைவடைந்து காணப்பட்டமையினைக் கருத்திற்கொண்டு, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 26(5)இல் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு முதற்தடவையாக பணவீக்கமானது தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுப் பகுதியில் இலக்கிலிருந்து 2 சதவீத புள்ளிகளை விட கூடுதலாகக் குறைவடைந்து காணப்பட்டு முதன் முறையான 2024இன் மூன்றாம் காலாண்டில் பணவீக்க இலக்கின் கீழ்ப்பக்கத்திலான சாத்தியமான மீறுகையொன்றினைக் குறித்துக்காட்டுகின்றன. தற்போது கிடைப்பனவாகவுள்ள தகவல்கள் மற்றும் எறிவுகள் என்பவற்றின் பிரகாரம், அத்தகையதொரு

[2] உலகளாவிய பேரண்டப்பொருளாதார எதிர்வுகூறல்கள் மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணவீக்கத் தரவுகளின் மாதாந்த வெளியீடுகள் மற்றும் மொ.உ.உற்பத்தித் தரவுகளின் காலாண்டு வெளியீடுகள் என்பன உள்ளடங்கலாக, எனினும் இவை மாத்திரமன்றி, அண்மைய பொருளாதார அபிவிருத்திகள் தொடர்பான தரவுகள் என்பவற்றைப் பயன்படுத்தி ஒவ்வொரு நாணயக் கொள்கைச் சுற்றிலும் இற்றைப்படுத்தப்படுகின்ற நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகளை அடையும் பொருட்டு பகுதியளவிலான கட்டமைப்புசார் பேரண்டப்பொருளாதார மாதிரியொன்றான காலாண்டு எறிவு மாதிரியை மத்திய வங்கி பயன்படுத்துகின்றது.

**வரைபடம் 01: எறிவுசெய்யப்பட்ட முதன்மைப் பணவீக்கம்**
**(காலாண்டு ரீதியாக, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)**
*2024 யூலை மாத நாணய கொள்கைச் சுற்றின் எறிவுகளின் அடிப்படையில்*




மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

*வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 கா4 வரையான அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ள வேளையில், இக்காலப் பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன.*


**குறிப்பு: எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல**

2024 யூலை மாத எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாக இருந்த தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை எறிவுகள் பிரதிபலிக்கின்றன. உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகள், இலங்கையின் முக்கிய வர்த்தகப்பங்காளர்களின் படிப்படியான வளர்ச்சி மீட்சி, படுகடன் மறுசீரமைப்புச் சூழ்நிலையின் கீழான பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி எறிவுகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் எதிர்பார்க்கப்படுகின்ற உள்நாட்டு இறைப் பாதை மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் நாணயக்கொள்கை நிலையினால் குறித்துக்காட்டப்படுகின்ற உலகளாவிய நிதியியல் நிலைப்பாடுகள் போன்ற எதிர்வுகூறல்களின் மீதான நிபந்தனைகளுக்கு உட்பட்டதாகும். மேலும், எறிவுகள் மாதிரியுருவிற்கு ஒத்திசைவான வட்டி வீதப் பாதை மற்றும் தோற்றம் பெறுகின்ற பேரண்டப்பொருளாதார ததிலிறுப்புக்கள் என்பன மீதான நிபந்தனைகளுக்குட்பட்டவையாகும். மேலும், அடிப்படை எறிவுகளில் முக்கிய பேரண்டப்பொருளாதார கொள்கை நகர்வுகளெதுவும் எதிர்பார்க்கப்படுவதில்லை. ஆதலால், பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் தொடர்ச்சி, இறைத் திரட்சி மீதான முயற்சிகள் மற்றும் படுகடன் மறுசீரமைப்பு என்பன உள்ளார்ந்தமாகக் குறித்துக்காட்டப்படுகின்றன. இவ்வூகங்களில் காணப்படும் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றம் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து அடையப்பட்ட பணவீக்கப் பாதை விலகுவதற்கு வழிவகுக்கக்கூடும். வீச்சு வரைபடங்களுடன் இணைந்து, நடுத்தர கால பேரண்டப்பொருளாதார எறிவுகள், ஒவ்வொரு நாணயக் கொள்கைச் சுற்றிலும் தொடர்ச்சியாக இற்றைப்படுத்தப்படும். தளம்பலான உலகளாவிய சூழல் மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரம் மற்றும் அரசியல் சூழல் என்பவற்றிலுள்ள நிச்சயமற்றதன்மைகள் என்பவற்றினைக் கருத்திற்கொண்டு, அடிப்படை எதிர்வுகூறல்கள் பல்வேறு உள்ளார்ந்த ஆற்றல்வாய்ந்த மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகளிற்கு உள்ளாகின்றன. அடிப்படை எதிர்வுகூறலிற்கான இடர்நேர்வுகள் தொடர்பிலான விவரங்கள் "எறிவுகளிற்கான இடர்நேர்வுகள்" பிரிவில் கலந்துரையாடப்பட்டுள்ளன.

மீறுகையானது 2024இன் நான்காம் காலாண்டு மற்றும் 2025இன் முதலாம் காலாண்டு என்பவற்றிலும் தொடரக்கூடும். மின்சாரத் தீர்வைகளிற்கான அண்மைய கணிசமானளவிலான கீழ்நோக்கிய திருத்தங்களிற்கு முதன்மைப் பணவீக்கத்தின் வீழ்ச்சியானது பாரியளவில் பங்களித்திருக்கின்றது. முதன்மைப் பணவீக்கமானது 2025இன் முற்பகுதியில் எறிவுசெய்யப்பட்ட காலப்பகுதியில் அதன் மிகவும் தாழ்ந்தளவிலான மட்டத்தினைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்ற வேளையில் 2024இன் முற்பகுதியில் பெறுமதி கூட்டப்பட்ட வரி அதிகரிப்புக்களின் முக்கிய காரணமாக எழும் தளத்

தாக்கங்கள்[3] எறிவுசெய்யப்பட்ட காலப்பகுதியில் மெதுவடைந்த உத்வேகத்திற்கு மத்தியில் பணவீக்கத்தினைக் கீழ்நோக்கி உந்தச்செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளையில், ஆண்டிற்கு ஆண்டு பணவீக்கமானது ஒப்பீட்டளவில் தாழ்ந்தளவிலான புள்ளிவிபரத் தளமொன்றினை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுமென்பதனால் அண்மைய மின்சாரத் தீர்வைத் திருத்தங்களின் காரணமாக ஏற்பட்டுள்ள தாழ்ந்தளவிலான விலை மட்டங்கள் 2025இன் இரண்டாம் அரையாண்டுப்பகுதியில் பணவீக்கத்தில் தற்காலிக அதிகரிப்பொன்றிற்கு வழிவகுக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்ற அதேவேளை, உலகளாவிய உணவு விலைகளில் சாத்தியமானளவிலான விரைவான அதிகரிப்பு, ஐக்கிய அமெரிக்க டொலரிற்கெதிராக இலங்கை ரூபாவின் சாத்தியமான படிப்படியான பெறுமானத்தேய்வின் தாக்கம்[4] மற்றும் பொருளாதாரத்தின் படிப்படியான மீட்சியின் காரணமாக எழுந்துள்ள கேள்வித் தாக்கம் என்பனவும் இப்பணவீக்க போக்கினை வலுப்படுத்தக்கூடும். இருப்பினும், 2025இன் பிற்பகுதியில் பணவீக்கத்தின் உயர்விற்கு முக்கிய காரணமாக விளங்குகின்ற

**வரைபடம் 02: எறிவுசெய்யப்பட்ட மையப் பணவீக்கம்**
**(காலாண்டு ரீதியாக, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண், ஆண்டிற்காண்டு, %)**
***2024 யூலை மாத நாணய கொள்கைச் சுற்றின் எறிவுகளின் அடிப்படையில்***




மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

*வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள 2022 கா4 வரையான அடையப்பட்ட தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2013=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ள வேளையில், இக்காலப் பகுதிக்குப் பின்னரான தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகாலரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன.*


**மேலேயுள்ள வரைபடம் 01இலுள்ள விளக்கக்குறிப்பைப் பார்க்கவும்.**

[3] தளத் தாக்கம் மற்றும் உத்வேகம் என்பன தொடர்பிலான மேலதிக கலந்துரையாடலிற்கு வரைபடம் 03உடன் இணைத்து அடிக்குறிப்பு 55இனைப் பார்க்கவும்.

[4] படுகடன் மறுசீரமைப்புச் செயன்முறையின் சாத்தியமானளவிலான நிறைவொன்றிற்கு மத்தியில் படுகடன் மீள்கொடுப்பனவுகளுடன் தொடர்புடைய சாத்தியமான வெளிப்பாய்ச்சல்கள், பொருளாதார நடவடிக்கை மற்றும் கொடுகடன் உயர்வு என்பவற்றின் மீட்சியுடன் அதிகரித்த இறக்குமதி மட்டங்கள் மற்றும் நீண்ட கால பெறுமானத்தேய்மானப் போக்கு என்பவற்றுடன் தொடர்புடைய எதிர்பார்க்கைகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், செலாவணி வீதத்தின் படிப்படியான பெறுமானத்தேய்வுப் பாதையொன்றினை மாதிரி கணிக்கின்றது.

புள்ளிவிபரத் தளத் தாக்கமானது அதன்பின்னர் படிப்படியாக இயல்புநிலைக்குத் திரும்புமென எதிர்பார்க்கப்படுவதனால் இது தற்காலிகமானதொன்றாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தர காலப்பகுதியில், பொருத்தமான கொள்கை வழிமுறைகள் மற்றும் உலகளாவிய எண்ணெய் மற்றும் உணவுப் பணவீக்கத்தின் இயல்புநிலைக்குத் திரும்புதல் என்பவற்றினால் ஆதரவளிக்கப்பட்டு, முதன்மைப் பணவீக்கமானது இலக்கிடப்பட்ட 5 சதவீத மட்டத்தினை அண்மித்து இறுதியில் நிலைபெற்று, அம்மட்டத்தினை அண்மித்துத் தொடர்ந்தும் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வரைபடம் 03: முதன்மைப் பணவீக்கம்: உத்வேகம் மற்றும் தளத் தாக்கம்[5]**
**(கொ.நு.வி.சுட்டெண், 2021=100)**




மூலம்: மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

பணவீக்கத்தின் கூறுகளைக் கருத்திற்கொள்கையில், வலு மற்றும் போக்குவரத்து என்பவற்றுடன் தொடர்புடைய செலவுகள் உள்ளடங்கலாக தளம்பலடைகின்ற விலைகளுடனான பொருட்கள் மற்றும் பணிகள் என்பவற்றினை உள்ளடக்காதிருப்பதுடன் அதன்மூலம், பொதுவாக பொருளாதாரத்தின் அடிப்படை கேள்வி அழுத்தங்களின் பரந்தளவிலான அளவீடொன்றாகக் கருதப்படுகின்ற மையப் பணவீக்கமானது 2024இன் இரண்டாம் அரையாண்டுப் பகுதியில் படிப்படியான மேல்நோக்கிய போக்கினைப் பின்பற்றுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டுக் கேள்வி நிலைமைகளின் எதிர்பார்க்கப்படும் மீட்சி மற்றும் உலகளாவிய உணவுப் பணவீக்கத்தில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பு

---

[5] பணவீக்கம் என்பது விலை மட்டத்தில் ஆண்டிற்காண்டு மாற்றத்தினால் பொதுவாக அளவிடப்படுகின்றது. அதாவது முன்னைய ஆண்டின் அதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் விலைச் சுட்டெண்ணினால் (இலங்கையைப் பொறுத்தவரையில், தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கையில் பணவீக்கத்தை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படும் இரு முக்கிய சுட்டெண்களான கொ.நு.வி.சுட்டெண் மற்றும் தே.நு.வி.சுட்டெண்களை தொகுத்து வெளியிடுகின்றது). கருத்திற்கொள்ளப்படும் காலப்பகுதியொன்றின் விலைமட்டத்தின் சதவீத மாற்றத்தினால் அளவிடப்படுகின்றது. எவ்வாறாயினும், விலைத் தகவல்கள் மாதாந்த கால இடைவெளியில் கிடைப்பனவாக உள்ளது. எனவே, ஒருவர் மாதத்திற்கு மாத அடிப்படையிலும் விலைகளின் மாற்றங்களை கணிப்பிடலாம். ஒரு மாதத்திலிருந்து அடுத்த மாதத்திற்கான ஆண்டிற்காண்டு பணவீக்கத்தின் மாற்றத்தை தற்போதைய மாதத்தின் மாதத்திற்கு மாத பணவீக்கத்திலிருந்து முன்னைய ஆண்டின் தொடர்பான மாதத்தின் மாதத்திற்கு மாத பணவீக்கத்தை கழிப்பதன் மூலம் அண்ணளவாக்கலாம் (இத்தகைய அண்ணளவானது சதவீத மாற்றங்களை மடக்கை வேறுபாடுகள் மூலம் அண்ணளவாக்க முடியும் என்ற உண்மையின் மூலம் ஊக்குவிக்கப்படுகின்றது). இதற்கமைய, தற்போதைய மாதத்தின் மாதத்திற்கு மாத பணவீக்கம் பொதுவாக உத்வேகம் என அழைக்கப்படுகின்றது. இது, அண்மைய மாதத்தில் பொருளாதார அபிவிருத்திகளின் காரணமாக எவ்வாறு ஆண்டிற்காண்டு பணவீக்கம் மாற்றமடைகின்றது என்பதை பிரதிபலிக்கின்றது. அதேவேளை, முன்னைய ஆண்டின் தொடர்புடைய மாதத்தில் மாதத்திற்கு மாத பணவீக்கத்தின் எதிர்மறையான பெறுமதி தளத் தாக்கம் என அழைக்கப்படுகின்றது. இது, எவ்வாறு ஆண்டிற்காண்டு பணவீக்கம் ஒரு மாதத்திலிருந்து அடுத்த மாதத்திற்கு மாறுவதற்கு புள்ளிவிபரத்தாக்கம் தாக்கம் செலுத்துகின்றது என்பதனை வகைகூறுகின்றது (அதாவது., $\pi_t^{YoY} \approx \pi_{t-1}^{YoY} + உத்வேகம் + தளத்\ தாக்கம்$, இங்கே $\pi$ என்பது பணவீக்கத்தை குறிக்கின்றது). இப்பாகுபாடானது ஆண்டிற்காண்டு பணவீக்கத்தின் இயக்கவாற்றலுக்கான முக்கிய பங்களிப்புக் காரணிகளை மதிப்பிடுவதற்கு ஆய்வாளர்களை அனுமதிக்கின்றது. மத்திய வங்கியின் மாதிரி எறிவுகளில் உள்ளவாறு காலாண்டு ரீதியான தகவல்கள் பயன்படுத்தப்படும் போது, உத்வேகம் மற்றும் தளத்தாக்கம் என்பவற்றிற்கு ஆண்டிற்காண்டு பணவீக்கத்தின் அதையொத்த வகைப்படுத்தலானது காலண்டிற்கு காலாண்டு பணவீக்கத்தைப் பயன்படுத்தியும் மேற்கொள்ளப்படலாம். மேலும், இவ்வணுகலானது பணவீக்கத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதல்ல எனினும் எந்த மாறிகளுக்கும் ஆண்டிற்காண்டு மாற்றங்களை கணிக்கப் பயன்படுத்தலாம்.

என்பன மையப் பணவீக்கத்தில் ஏற்படுகின்ற படிப்படியான அதிகரிப்பின் பின்னணியிலுள்ள முக்கிய காரணிகளாகக் காணப்படுகின்றன. முதன்மைப் பணவீக்கத்தின் மெதுவடைந்த எறிவுசெய்யப்பட்ட பாதைக்கு உந்துதலளிப்பதில் சாதனமாக விளங்குகின்ற வலு மற்றும் போக்குவரத்து விலைகளை மையப் பணவீக்கச் சுட்டெண் உள்ளடக்காதிருப்பதனால் முதன்மைப் பணவீக்கத்தின் தற்போதைய மற்றும் எதிர்பார்க்கப்படும் குறைவானது மையப் பணவீக்கத்தில் பிரதிபலிக்கப்படுவதில்லை. இருப்பினும், 2024இன் முற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பெறுமதி கூட்டப்பட்ட வரி உயர்வின் காரணமாக மையப் பணவீக்கக் கூடையிலுள்ள பெரும்பாலான பொருட்களின் விலைகள் அதிகரித்தமையினால் முதன்மைப் பணவீகத்தினைப் போலவே மையப் பணவீக்கமும் குறிப்பாக, 2025இன் முற்பகுதியில் புள்ளிவிபரத் தளத் தாக்கத்தினால் பாதிப்பிற்குட்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்கமைய, மையப் பணவீக்கமானது 2025இன் முற்பகுதியில் தற்காலிகமானதொரு வீழ்ச்சியினைக் கொண்டிருக்கக்கூடுமெனினும் தாழ்ந்தளவிலான தளம்பலொன்றுடன் அதன் பின்னர் ஒப்பீட்டளவில் தொடர்ந்தும் நிலையானதாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. முதன்மைப் பணவீக்கத்துடன் ஒப்பிடுகையில் மையப் பணவீக்கத்தில் பொதுவாகப் காணப்படும் ஒப்பீட்டளவில் உயர்ந்த மட்டத்திலான விடாப்பிடியானதன்மையே இதற்குக் காரணமாகும்.

அண்மைக் காலத்தில், வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கமானது தொடர்ந்தும் மெதுவடைந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், நடுத்தர காலத்தில் இலக்கினை நோக்கிய முதன்மைப் பணவீக்கத்தில் அதிகரிப்பொன்றிற்குப் பங்களிக்கின்ற விதத்தில் விலைகளில் படிப்படியான இயல்புநிலைக்குத் திரும்புதலொன்று எதிர்பார்க்கப்படுகின்றது. உலகளாவிய எண்ணெய் விலைகளில் எதிர்பார்க்கப்படுகின்ற படிப்படியாக அதிகரித்துச்செல்கின்ற போக்கு மற்றும் இலங்கை ரூபாவின் சாத்தியமான படிப்படியான பெறுமானத்தேய்வு என்பவற்றினை இந்நடத்தையானது பாரியளவில் பிரதிபலிக்கின்றது. தற்போது நிலவுகின்ற தளம்பலான புவிசார் அரசியல் சூழலுக்கு மத்தியில், எண்ணெய் விலைகளில் படிப்படியான உயர்வொன்றினை அடிப்படை எறிவு ஊகிக்கின்றது. இருப்பினும், சமீப காலங்களில் காணப்பட்ட நிலையற்ற எண்ணெய் விலை நடத்தையினால் பிரதிபலிக்கப்பட்டவாறு இந்நிலைமைகளுடன் தொடர்புடைய நிச்சயமற்றதன்மை மிகவும் உயர்ந்தளவில் காணப்படுகின்றது. உலகளாவிய விலை மட்டங்களில் படிப்படியான உயர்வின் ஊடுகடத்தலுடன், வலு மற்றும் போக்குவரத்துத் துறைகளுடன் தொடர்புடைய உள்நாட்டு விலைகள் சில அழுத்தங்களை எதிர்கொண்டு, அதன் தற்போது நிலவுகின்ற மெதுவடைந்த மட்டத்திலிருந்து வலு மற்றும் போக்குவரத்துப் பணவீக்கத்தின் இயல்புநிலைக்குத் திரும்பலிற்குப் பங்களிக்கக்கூடும். மேலும், குறிப்பாக தொடர்ச்சியான கணிசமானளவிலான கீழ்நோக்கிய விலைத் திருத்தங்கள் காணப்பட்டமையினைக் கருத்திற்கொண்டு, சாத்தியமான மேல்நோக்கிய மின்சாரத் தீர்வைத் திருத்தங்களினாலும் இப்பாதை பாதிப்பிற்குட்படக்கூடும். மேலும், தளம்பலடையும் உணவு வகையின் பணவீக்கமானது அண்மைய காலத்தில் தொடர்ந்தும் ஓரளவு உயர்வடைந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், தளம்பலடையும் உணவுப் பணவீக்கமானது பின்னர் இயல்புநிலைக்குத் திரும்பி, அதன்மூலம் முதன்மைப் பணவீக்கத்தின் இயல்புநிலைக்குத் திரும்பலிற்கு ஆதரவளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

***பணவீக்க எதிர்பார்க்கைகள்***

மத்திய வங்கியின் பணவீக்க எதிர்பார்க்கைகள் தொடர்பான அளவீட்டின் பிரகாரம், அடையப்பட்ட பணவீக்கத்தின் போக்குடன் இசைந்து செல்லும் விதத்தில் சகல தவணைகளுக்குமான கம்பனித் துறையின் பணவீக்க எதிர்பார்க்கைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2024 யூன் மாத

அளவீட்டுச் சுற்றில் வீழ்ச்சியடைந்தன. வட்டி வீதங்களில் எதிர்பார்க்கப்படும் குறைப்பு, அரச செலவினத்தின் சாத்தியமான அதிகரிப்பு மற்றும் ரூபாவின் பெறுமானத்தேய்வு என்பவற்றிற்கான பதிலிருப்புக்களினால் பங்களிக்கப்பட்டு 2024 யூன் மாத அளவீட்டுச் சுற்றின் பிரகாரம், தற்போதைய மாதத்திலிருந்து எதிர்வருகின்ற 6 மாத காலப்பகுதிக்கு எதிர்பார்க்கப்படும் பணவீக்கத்தில் படிப்படியானதோர் உயர்வு பதிவுசெய்யப்படக்கூடும். இத்தவணைகளுடன் ஒப்பிடுகையில், நீண்ட காலத்திலான பணவீக்க எதிர்பார்க்கைகள் ஒப்பீட்டளவில் குறைந்தளவிலான சாய்வான அதிகரிப்பொன்றினைக் காட்டின. மிக முக்கியமாக, நீண்டகால தவணைகளிற்கான எதிர்பார்க்கைகள் 5 சதவீதம் கொண்ட பணவீக்க இலக்கினைப் பரந்தளவில் அண்மித்துக் காணப்பட்டமையானது நிலைநிறுத்தப்பட்ட எதிர்பார்க்கைகளின் சமிக்ஞைகளைப் பிரதிபலிக்கின்றன.

## சிறப்புக் குறிப்பு அ: நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழான பணவீக்க இலக்கு

**அறிமுகம்**

இலங்கை மத்திய வங்கி நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்றுடன் இசைந்து செல்லும் விதத்தில் நாணயக் கொள்கையினை மேற்கொள்கின்றது. தற்போது, **பணவீக்க இலக்கானது 5 சதவீதமாகக்** காணப்படுகின்றது. தெளிவான பணவீக்க இலக்கொன்று காணப்படுவதானது பொருளாதார ஆர்வலர்களின் பணவீக்க எதிர்பார்க்கைகளை நெறிப்படுத்தி, விலை அபிவிருத்திகளின் ஊகிக்கத்தக்கதன்மையினை மேம்படுத்தி, அதன்மூலம் நிறுவனங்கள் மற்றும் குடியிருப்புக்கள் சிறப்பாக எதிர்வுகூற ஆதரவளிப்பதுடன் நாணயக் கொள்கையின் நம்பகத்தன்மையினை மேம்படுத்தத் துணைபுரியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இக்கட்டுரை, பணவீக்க இலக்கொன்றின் நிறுவுதலினைத் தேவைப்படுத்துகின்ற மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பு, தொடர்புடைய நியதிச்சட்டப் பின்னணி, பணவீக்க இலக்கு, மற்றும் இலக்கு மீறுகையொன்று எவ்வாறு வரையறுக்கப்படுகின்றது என்பவற்றினைச் சுருக்கமாகக் கலந்துரையாடுகின்றது.

**நாணயக் கொள்கைக் கட்டமைப்பின் பரிணாமம்**

மத்திய வங்கியானது பணச் சபை முறைமையாக முன்னர் நிலவியதுடன் அதனைத்தொடர்ந்து 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் கீழ் இலங்கையின் நாணய அதிகாரசபையாக 1950இல் நிறுவப்பட்டது. ஆரம்பத்தில், மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பானது நிலையான செலாவணி வீதத்தினை அடிப்படையாகக் கொண்டிருந்தது. 1977 பொருளாதாரத் தாராளமயமாக்கலைத் தொடர்ந்து மற்றும் உலகளாவிய அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில், 1980களின் முற்பகுதியளவில், செலாவணி வீதத்தின் அடிப்படையிலமைந்த கட்டமைப்பிலிருந்து நாணயக் கூட்டு இலக்கிடலினை நோக்கி மத்திய வங்கி நகர்ந்தது (Weerasinghe, 2018). நாணயக் கொள்கை நவீனமயப்படுத்தல் முயற்சிகள் 2000களில் தொடங்கியதுடன் 2015 தொடக்கம் நாணய இலக்கிடல் மற்றும் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் ஆகிய இரண்டு சிறப்பியல்புகளையும் உள்ளடக்கிய மேம்படுத்தப்பட்ட நாணயக் கொள்கைக் கட்டமைப்பொன்று பின்பற்றப்பட்டது (Central Bank of Sri Lanka, 2019a, 2023). 2020இலிருந்து, மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலினைப் பின்பற்றியபோதிலும், அதற்கு அவசியமான சட்டவாக்க ஆதரவானது 2023இலேயே பெறப்பட்டது.

**நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலின் முறைசார் பின்பற்றுகை**

பொருளாதாரம் மற்றும் மத்திய வங்கித்தொழில் என்பவற்றின் பரிணாமமடைகின்றதன்மையுடன் பொருந்திச்செல்லும் பொருட்டு 2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம் 2023 செத்தெம்பரில் சட்டமாக்கப்பட்டதுடன், நாணய விதிச் சட்டத்தினைப் பதிலீடு செய்தது. நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலின் முறைசார் பின்பற்றுகையினை இயலச்செய்கின்ற பல்வேறு ஏற்பாடுகளைப் புதிய சட்டம் உள்ளடக்கின்றது. இலங்கை மத்திய வங்கிச் சட்டமானது நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலினை மத்திய வங்கியின் நாணயக் கொள்கைக் கட்டமைப்பாக முறையாக அங்கீகரிக்கின்றது. குறிப்பாக, இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 11(1)இன் பிரகாரம், உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைந்து பேணும் பொருட்டு நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்புடன் இசைந்து செல்லும் விதத்தில் நாணயக் கொள்கையை வகுப்பதற்கும் நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த செலாவணி வீதக் கட்டமைப்பொன்றினை நடைமுறைப்படுத்துவதற்கும் மத்திய வங்கியின் நாணயக் கொள்கைச் சபையானது பொறுப்பாக்கப்பட்டுள்ளது.

அறிவிக்கப்பட்ட எண்ணியல் பணவீக்க இலக்கு, பணவீக்க எதிர்வுகூறலொன்றில் கவனம் செலுத்துகின்ற நாணயக் கொள்கை நடைமுறைப்படுத்தல் மற்றும் உயர்ந்தளவிலான வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறும்தன்மை என்பவற்றினைப் பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பொன்று உள்ளடக்கின்றது (Svensson, 2010). வெளிப்படையான மற்றும் நம்பகமான பணவீக்க குறிக்கோளொன்று நீண்ட கால பணவீக்க எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்த துணைபுரியுமென முன்னைய கற்கைகள் எடுத்துக்காட்டுகின்றன (Gürkaynak et al., 2007). பெடரல் ரிசேர்வின் முன்னாள் தலைவர் பென் பேர்னான்கே அவர்களின் கருத்திற்கமைய, பணவீக்க எதிர்பார்க்கைகள் உண்மைப் பணவீக்கத்தினைப் பாரியளவில் செல்வாக்கு செலுத்துகின்றன (Bernanke, 2007). பணவீக்க எதிர்பார்க்கைகள் பெரும்பாலும் தன்னிறைவடைந்துகொள்வதனால், எதிர்பார்க்கைகளை நிலைநிறுத்துவதானது உண்மைப் பணவீக்கத்தினைச் செல்வாக்கு செலுத்த முடியும். இதற்கமைய, பணவீக்க இலக்கிடல் நாணய இலக்கொன்றிலும் பார்க்க பொதுமக்களுடன் மிகவும் தொடர்புடையதாகக் காணப்படுகின்றது. மேலும், நாணயக் கொள்கையின் மையமாகப் பணவீக்க வீதம் போன்ற பரந்தளவில் புரிந்துகொள்ளப்பட்ட, அடிக்கடி மற்றும் பொதுவாகக் கிடைப்பனவாகக் காணப்படுகின்ற குறிகாட்டியொன்றினைப் பயன்படுத்துவதன் மூலம் மத்திய வங்கிக்கும் பொதுமக்களுக்கும் இடையிலான ஏதேனும் தகவல் இடைவெளிகளைக் குறைத்து, அதன்மூலம் அதிகரித்தளவிலான வெளிப்படைத்தன்மையினையும் பொறுப்புக்கூறும்தன்மையினையும் வசதிப்படுத்தவும் இது துணைபுரிகின்றது (Weerasinghe, 2018). பணவீக்க இலக்கிடலினை மேற்கொள்கின்ற உலகெங்கிலும் உள்ள பெரும்பாலான மத்திய வங்கிகள் கடுமையான பணவீக்க இலக்கிடலிலும் பார்க்க நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலினைப் பின்பற்றுகின்றன. நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலானது பணவீக்கம் மற்றும் உண்மைப் பொருளாதாரம் ஆகிய இரண்டையும் உறுதிப்படுத்துவதில் கவனம்செலுத்துகின்ற அதேவேளை, கடுமையான பணவீக்க இலக்கிடலானது உண்மைப் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டினைக் கருத்திற்கொள்ளாமல் பணவீக்கம் தொடர்பில் மாத்திரமே கவனம்செலுத்துகின்றது (Svensson, 2009). இலங்கைச் சூழலில், இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 6(1)ஆனது மத்திய வங்கியின் முதன்மைக் குறிக்கோளாக உள்நாட்டு விலை உறுதிப்பாட்டினை அடைந்து பேணுவதனைக் குறித்துரைத்து, பணவீக்கத்தினை உறுதிப்படுத்துவதன் முக்கியத்துவத்தினை வலியுறுத்துகின்றது. அதேவேளையில், இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 6(4)ஆனது மத்திய வங்கி, ஏனையவற்றிற்கிடையில், அதன் முதன்மைக் குறிக்கோளினைப் பின்தொடர்வதற்காக அதன் உள்ளார்ந்த ஆற்றல் மட்டத்தினை நோக்கிய வெளியீட்டினை உறுதிப்படுத்துவதனை கருத்திற்கொள்ள வேண்டுமெனத் தேவைப்படுத்தி, அதன்மூலம் பிரிவு 11(1)இல் முறையாக அங்கீகரிக்கப்பட்டுள்ள நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடலிற்கான நியதிச்சட்ட ஏற்பாட்டிற்கு வழிவகுத்துள்ளது.


**இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரகாரம் பணவீக்க இலக்கு**

இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 26(1)ஆனது அடையப்பட வேண்டிய பணவீக்க இலக்கினை நிர்ணயிக்கின்ற நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையொன்றில் நிதியமைச்சரும் மத்திய வங்கியும் கையொப்பமிட வேண்டுமெனத் தேவைப்படுத்துகின்றது. இதற்கமைய, 2023 ஒத்தோபரில் இத்தேவைப்பாட்டினை நிறைவேற்றுகின்ற உடன்படிக்கையொன்று கையொப்பமிடப்பட்டதுடன் இது 2352/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி மூலம் பொதுமக்களுக்கு கிடைப்பனவாகக் காணப்பட்டது. நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையின் பிரகாரம்,

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையிலமைந்த காலாண்டு முதன்மைப் பணவீக்கத்தினை 5 சதவீதம் கொண்ட இலக்கில் பேணுவதற்கு மத்திய வங்கி தேவைப்படுத்தப்பட்டுள்ளது.[†] மத்திய வங்கி மற்றும் அரசாங்கம் என்பன இணைந்து கணியம்சார் பணவீக்க இலக்கொன்றினை நிர்ணயிப்பதானது நாட்டில் தாழ்ந்தளவிலான மற்றும் நிலையான பணவீக்க வீதமொன்றினை அடைவதற்கான அவர்களது பகிரப்பட்ட அர்ப்பணிப்பினைக் குறிக்கின்றது. இருப்பினும், இவ்விலக்கினை அடையும் பொருட்டு சுயாதீனமாக செயலாற்றுவதற்கான சுதந்திரம் மத்திய வங்கிக்கு வழங்கப்பட்டுள்ள வேளையில் பொதுமக்களுக்குப் பொறுப்புக்கூறும் கடப்பாட்டினையும் சுமந்துள்ளது. அவ்வாறு செய்கையில், பணவீக்க இலக்கினைப் பூர்த்திசெய்வதற்கான உபாயம் மற்றும் தீர்மானங்கள் தொடர்பிலான பொதுத் தகவல்களை மத்திய வங்கி வழங்குகின்றது. வெளிப்படைத்தன்மைக்கான இவ் அர்ப்பணிப்பானது நாணயக் கொள்கையின் எதிர்காலப் போக்கு தொடர்பிலான நிச்சயமற்றதன்மையினைக் குறைப்பதற்கும் மத்திய வங்கியின் நம்பகத்தன்மையினை மேம்படுத்துவதற்கும் துணைபுரிகின்றது.

பிரிவு 26(5)இல், மத்திய வங்கி பணவீக்க இலக்கினை உடன்பட்ட இடைவெளியொன்றினுள் தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளுக்கு அடையத் தவறுமாயின் நாணயக் கொள்கைச் சபையானது நிதியமைச்சரினூடாக பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றினைச் சமர்ப்பிக்க வேண்டுமெனவும் அது பொது மக்களுக்கு கிடைப்பனவாக இருக்க வேண்டுமெனவும் இலங்கை மத்திய வங்கிச் சட்டம் தேவைப்படுத்துகின்றது. இந்நோக்கத்திற்காக, நாணயக் கொள்கைக் கட்டமைப்புசார் உடன்படிக்கையில் **±2 சதவீத புள்ளிகளைக் கொண்ட** சமச்சீரான **இடைவெளியொன்று** ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமைய, அடையப்பட்ட காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது 5 சதவீத இலக்கிலிருந்து **தொடர்ச்சியாக இரண்டு காலாண்டுகளில்** இலக்கின் மேல்நோக்கிய அல்லது கீழ்நோக்கிய திசையிலிருந்து 2 சதவீத புள்ளிகளுக்கு மேலாக விலகியிருக்குமாயின் இலக்கு மீறுகையொன்று நிகழும் (அனுமானரீதியிலான பணவீக்க இலக்கங்களுடனான இலக்கு மீறுகையொன்றின் விளக்கப்படமொன்று வரைபடம் அ:1இல் வழங்கப்பட்டுள்ளது). இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் பிரிவு 26(5)இற்கமைய இலக்கு மீறுகையொன்று நிகழும் பட்சத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கையானது பணவீக்க இலக்கினை அடையத் தவறியமைக்கான காரணங்கள், மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ள நிவாரண நடவடிக்கைகள் மற்றும் பணவீக்க இலக்கு எந்தக் காலவரையினுள் எய்தப்படக்கூடுமோ அக்காலவரையறையின் ஒரு மதிப்பீடு என்பவற்றினை குறிப்பிட வேண்டும்.

**வரைபடம் அ.1: இலக்க மீறுகைகளின் சில தெரிவுசெய்யப்பட்ட அனுமான ரீதியிலான உதாரணங்கள்**




மூலம்: மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

***உசாத்துணைகள்:***

1. Bernanke, B.S. (2007). *Inflation Expectations and Inflation Forecasting.* [Online] [Accessed 01 August 2024] Available from: https://www.federalreserve.gov.
2. Central Bank of Sri Lanka (2019a). *A Primer on the Conduct of Monetary Policy and Central Banking in Sri Lanka: Past, Present and Future*, Information Series Note. [online] [Accessed 07 August 2024] Available from: https://www.cbsl.gov.lk.
3. Central Bank of Sri Lanka (2019b). 'Box 09: Choice of the Inflation Target for Flexible Inflation Targeting (FIT) in Sri Lanka', In *Central Bank of Sri Lanka Annual Report 2018*. pp. 243–246.
4. Central Bank of Sri Lanka (2023). 'Box 03: Highlights of the Central Bank of Sri Lanka Act', In *Central Bank of Sri Lanka Annual Report 2022*. pp.34–36.

[†] அத்தகைய பணவீக்க இலக்கொன்றிற்கான சில மேலதிக தரவுகளுக்கு Central Bank of Sri Lanka, (2019b)ஐப் பார்க்கவும்.


5. Gürkaynak, R.S., Levin, A.T., Marder, A.N. and Swanson, E.T. (2007). 'Inflation Targeting and the Anchoring of Inflation Expectations in the Western Hemisphere', *FRSB Economic Review*, pp. 25–47.
6. Svensson, L.E.O. (2009). *Flexible Inflation Targeting – Lessons from the Financial Crisis*. [Online] [Accessed 05 August 2024] Available from: https://www.bis.org.
7. Svensson, L.E.O. (2010). 'Inflation Targeting', In *Handbook of Monetary Economics*, Vol. 3, pp. 1237-1302.
8. Weerasinghe, P.N. (2018). 'Evolution of Monetary and Exchange Rate Policy in Sri Lanka and the Way Forward', *Central Bank of Sri Lanka - Staff Studies*, 48(1), pp. 1-19.

**உண்மைப் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள்**

கிடைப்பனவாகவுள்ள குறிகாட்டிகள், அளவீட்டுக் கண்டறிகைகள் மற்றும் அலுவலர் மதிப்பீடுகள் என்பவற்றின் அடிப்படையில், பொருளாதாரமானது 2024இன் இரண்டாம் காலாண்டில் தொடர்ச்சியான வளர்ச்சியினைப் பதிவுசெய்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இச்செயலாற்றமானது கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளின் ஆரோக்கியமான மட்டங்களிலான செயலாற்றங்களினால் முக்கியமாக உந்தப்பட்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், கடந்த காலத்தில் பல்வேறு காலாண்டுகளாகப் பதிவுசெய்யப்பட்ட பொருளாதார நடவடிக்கையின் தொடர்ச்சியான சுருக்கத்தின் காரணமாக 2024இன் முதலாவது அரையாண்டில் ஏற்பட்டுள்ள வலுவான பொருளாதார வளர்ச்சியானது 2023இன் தொடர்புடைய காலப்பகுதியில் தாழ்ந்தளவிலான புள்ளிவிபரத் தளமொன்றினால் பகுதியளவில் ஆதரவளிக்கப்பட்டுள்ளமையானது குறிப்பிடத்தக்கதொன்றாகக் காணப்படுகின்றது. இதற்கமைய, 2023இன் இரண்டாம் அரையாண்டில் பதிவுசெய்யப்பட்ட நேர்மறையான வளர்ச்சி வீதங்களின் காரணமாக ஒப்பீட்டளவில் உயர்ந்தளவிலான புள்ளிவிபரத் தளமொன்றினை அடிப்படையாகக் கொண்டு ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியானது பெற்றுக்கொள்ளப்படும் என்பதனைக் கருத்திற்கொண்டு, 2024இன் இரண்டாம் அரையாண்டுப்பகுதியில் பொருளாதார வளர்ச்சியானது 2024இன் முதலாம் அரையாண்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள வளர்ச்சியிலும் பார்க்க தாழ்வாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வரைபடம் 04: எறிவுசெய்யப்பட்ட காலாண்டு ரீதியான மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி (ஆண்டிற்காண்டு, %)**

*2024 யூலை மாத நாணய கொள்கைச் சுற்றின் எறிவுகளின் அடிப்படையில்*




மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

மேலேயுள்ள வரைபடம் 01இலுள்ள விளக்கக்குறிப்பைப் பார்க்கவும்.

முதலீடுகளை ஊக்குவித்தல், நுகர்வோர் செலவிடலை மேம்படுத்துதல் மற்றும் இவையினால் கூட்டுக் கேள்வியினை அதிகரித்தல் என்பவற்றினூடாக வளர்ச்சியை அதன் உள்ளார்ந்த மட்டத்தினை நோக்கித் தூண்டுவதற்கு நாணய நிலைமைகளின் தளர்வடைதலானது துணைபுரியுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, முக்கிய வர்த்தகப் பங்காளர்களின் பொருளாதார நிலைமைகளின் எறிவுசெய்யப்பட்ட வலுப்படுத்தலானது அதிகரித்த ஏற்றுமதிகளினூடாக உள்நாட்டுப் பொருளாதாரத்திற்கு நன்மையளிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், உள்நாட்டுப் பணிகளிற்கான வெளிநாட்டுக் கேள்வியானது குறிப்பாக, சுற்றுலாத்துறை, தொடர்ந்தும் உறுதியாகக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இந்நிலைமைகள் பொருளாதாரத்தின் மீட்சிக்கு ஆதரவளித்து, எதிர்மறையான வெளியீட்டு இடைவெளியினைச் சுருக்கமடையச்செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், தொடர்ச்சியான இறைத் திரட்சி முயற்சிகளின் காரணமாக, பொருளாதார நடவடிக்கையினை ஊக்குவிப்பதற்கான இறைத் துறையின் இயலாற்றல் தொடர்ந்தும் வரையறுக்கப்பட்டுக் காணப்படுகின்றது. இதற்கமைய, நீடித்துநிலைத்திருக்கின்றதோர் அடிப்படையில் எதிர்மறையான வெளியீட்டு இடைவெளியினைக் குறைத்தல் தொடர்ந்தும் சவாலானதொன்றாகக் காணப்படுவதானது நடுத்தர காலத்தில் மெதுவடைந்த வளர்ச்சி எறிவொன்றிற்கு வழிவகுக்கின்றது.

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ஆகிய இரு சேமிப்புக்களினாலும் ஆதரவளிக்கப்பட்ட முதலீட்டு நடவடிக்கையில் நீடித்துநிலைத்திருக்கின்றதோர் உயர்வானது வளர்ச்சி உத்வேகத்தினை நீடித்துநிலைபெறச்செய்வதற்குத் தீர்க்கமானதொன்றாகக் காணப்படும். வினைத்திறனான கொள்கைகளைப் பின்பற்றுதல் மற்றும் திட்டமிடப்பட்ட கட்டமைப்புசார் சீராக்கங்கள் என்பன பொருளாதாரம் நடுத்தர காலத்தில் அதன் முழுமையான உள்ளார்ந்த ஆற்றலினை அடைவதற்கு இன்றியமையாதனவாகவுள்ளன. எனவே, பொருளாதாரத்தின் உற்பத்தித்திறன், வினைத்திறன் மற்றும் போட்டித்தன்மை என்பவற்றை மேம்படுத்துதல் மற்றும் பலவீனமான வியாபாரச் சூழலொன்றினால் தோற்றுவிக்கப்படும் சவால்கள் போன்ற கட்டமைப்புசார் தடைகளைக் குறைப்பதனூடாக வளர்ச்சித் தடைகளைச் சமாளித்தல் என்பன நீடித்துநிலைத்திருக்கின்ற வளர்ச்சியினை அடைவதற்கும் உள்ளார்ந்த ஆற்றலினை மேம்படுத்துவதற்கும் முக்கியமானவைகளாகக் காணப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கி ஜூன் 2023 முதல் ஏற்றுக்கொள்ளப்பட்ட இடவசதி நாணயக் கொள்கை நிலைப்பாட்டிற்கு ஏற்ப அதன் முக்கிய கொள்கை வட்டி விகிதங்களை தொடர்ந்து குறைத்தது. பணவீக்க அழுத்தங்கள் குறைவாக இருந்ததால், 2024 ஆம் ஆண்டில் பணவியல் கொள்கை மேலும் தளர்த்தப்பட்டது.

## 2.2. எதிர்வுகூறலுக்கு அடிப்படையாகவிருக்கும் முக்கிய எடுகோள்கள்

நடுத்தர கால எதிர்வுகூறல்களை அடைவதில் பயன்படுத்தப்பட்ட முக்கிய எடுகோள்களின் சுருக்கம் இப் பகுதியில் தரப்பட்டுள்ளது.

**உலகளாவிய சூழல்**

உலகளாவிய எறிவு மாதிரியுரு வலையமைப்பிற்கமைய[6], உலக பொருளாதாரமானது 2024ஆம் ஆண்டில் 2.9 சதவீதம் கொண்ட வளர்ச்சி வீதத்தை அடையுமென எறிவுசெய்யப்படுகின்ற அதேவேளை உலகளவில் நிலவுகின்ற இறுக்கமான நாணயக் கொள்கை வழிமுறைகள் காரணமாக 2025ஆம் ஆண்டில் சிறிதளவிலான மெதுவடைதல் எதிர்பார்க்கப்படுகின்றது. சீனா தவிர அனைத்து முக்கிய நாடுகளிலுமுள்ள

[6] மத்திய வங்கியானது நடுத்தரகால எறிவுகளுக்கான உள்ளீடுகளாக உலகளாவிய எறிவு மாதிரியுரு வலையமைப்பினால் தயாரிக்கப்பட்ட உலகளாவிய பேரண்ட பொருளாதார குறிகாட்டிகளின் எறிவுகள் பயன்படுத்தப்படுகின்றன.2024 யூலை நாணயக் கொள்கைச் சுற்றில் பயன்படுத்தப்படும் எறிவுகள் 2024 யூன் 26 அன்று கிடைக்கப்பெற்ற உலகளாவிய எறிவு மாதிரியுரு வலையமைப்பு எறிவுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.

பணவீக்கமானது இலக்குகளை கடந்துசெல்கின்றது. இவ் எறிவுகளை அடிப்படையாகக் கொண்டு அடையப்பட்ட ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு இடைவெளியானது[7] பெரும்பாலும் எதிர்வுகூறல் எல்லையின் போது சாதகமாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டு, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், மற்றும் யூரோ வலய நாடுகளின் எதிர்பார்க்கப்பட்ட மீட்சியினால் பாரியளவில் தூண்டப்பட்டது. உலகளாவிய எறிவு மாதிரி வலையமைப்பிற்கமைய, ஐக்கிய அமெரிக்காவின் பெடரல் ரிசேர்வ் 2024 செத்தெம்பரில் பெடரல் நிதிய வீதத்தைக் குறைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. சாதகமான கேள்வி தோற்றப்பாட்டிற்கு மத்தியில், உலகளாவிய நிரம்பலைப் பாதிக்கின்ற புவிசார் அரசியல் பதட்டங்கள் மற்றும் பெற்றோலியம் ஏற்றுமதி செய்கின்ற நாடுகளின் அமைப்புக்களின் நிரம்பல் குறைப்புக்களினால் தாக்கம்செலுத்தப்பட்டு, சராசரி பிறன்ட் மசகெண்ணெய் விலை கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டில் உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. நடுத்தர காலப்பகுதியில், உலக எண்ணெய் விலைகள் படிப்படியாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, உலகளாவிய உணவு விலைகள் உயர்வடையுமென எதிர்பார்க்கப்பட்டு, காலநிலையுடன் தொடர்புடைய இடர்நேர்வுகள் உணவு நிரம்பல்களை பாதிக்கின்றதால் உலக உணவு விலைகள் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதுடன் அவற்றின் அதிகரிப்பு தொடருமென எறிவுசெய்யப்படுகின்றது.

**இறைப் பாதை**

தொடர்ச்சியான பன்னாட்டு நாணய நிதிய – விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சி மற்றும் படுகடன் நிலைபெறும் தன்மையை மீட்டெடுப்பதற்கான முயற்சிகள் என்பனவற்றுக்கு இணங்க, படுகடன் மறுசீரமைப்பு சூழ்நிலை அதேபோன்று தற்போதுள்ள இறைத் திரட்சி வழிமுறைகள் அடிப்படை எறிவுகளுக்கு பயன்படுத்தப்படும் இறை நிலுவைகளில் பிரதிபலிக்கின்றன. 2024ஆம் ஆண்டிலிருந்தான தரவுகள் 2024 யூனில் பன்னாட்டு நாணய நிதிய அலுவலர் அறிக்கையில் வெளியிடப்பட்ட பிந்தைய எறிவுகளுக்கமைய காணப்படுகின்றன. வங்கிகளின் மீள்மூலதனமயமாக்கலுக்கான வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீடுகள் நடுநிலையான வளர்ச்சியாக கருதப்படுகின்ற அதேவேளை, வரவுசெலவுத் திட்டப் பற்றாக்குறை மற்றும் படுகடன் செலவின் பாதைக்கிணங்க, அரசப் படுகடன் காலாண்டு எறிவு மாதிரியினால் நிர்ணயிப்பதற்கு அனுமதிக்கப்படுகின்றது.

**அட்டவணை 01: இறை மீதிகள் பற்றிய எடுகோள்கள் (மொ.உ.உற்பத்தியின் %)**

| | 2024 | 2025 | 2026 | 2027 | 2028 |
|---|---|---|---|---|---|
| வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை | 8.6 | 5.2 | 4.6 | 4.1 | 3.8 |
| படுகடன் செலவு | 8.4 | 7.5 | 6.9 | 6.4 | 6.2 |

மூலம்: ச.நா.நிதியதித்தின் அலுவலர் அறிக்கையில் வெளியிடப்பட்ட ச.நா.நிதியத்தின் அண்மைக்கால எறிவுகள் - யூன் 2024

**வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு**

பணிகள் ஏற்றுமதிகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் போன்ற குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்களினால் தூண்டப்பட்டு, வர்த்தகத்தின் விரிவடைதல் மற்றும் முதலாந்தர வருமான கணக்குப் பற்றாக்குறைகளுக்கு மத்தியிலும் கூட, நடைமுறைக் கணக்கு 2024ஆம் ஆண்டின்

[7] இலங்கையின் ஆறு முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடன் தொடர்புடைய மொத்த வர்த்தகத்தின் இயல்பு நிலைப்படுத்தப்பட்ட பங்குகளைப் பயன்படுத்தி உலகளாவிய எறிவு மாதிரி வலையமைப்பின் எறிவுகளில் தரப்பட்டுள்ள வர்த்தகப் பங்காளர்களின் நிறையேற்றப்பட்ட சராசரி வெளியீட்டு இடைவெளிகளாக வர்த்தக நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளி கணிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் மற்றும் பணிகளுக்கான வெளிநாட்டு கேள்வியை சிறப்பாக வெளிக்காட்டுவதற்காக வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளிக்கான நிறையேற்றங்கொண்ட முறையானது மொத்த வர்த்தகத்தின் பங்கிலிருந்து ஏற்றுமதிகளின் பங்காக மாற்றம்செய்யப்பட்டுள்ளது.

முதற்காலாண்டில் மிகையொன்றைப் பதிவுசெய்தது. முன்னோக்கி செல்கையில், இறக்குமதிக் கட்டுப்பாடுகளைத் தளர்த்தலுடன், இறக்குமதிகள் உயர்வடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. அதிகரிக்கப்பட்ட இறக்குமதிச் செலவினம் காரணமாக 2024ஆம் ஆண்டின் பிற்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறை விரிவடையுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், பணிகள் கணக்கு மற்றும் இரண்டாந்தர வருமானக் கணக்கு என்பவற்றில் எதிர்பார்க்கப்பட்ட மேம்பாடுகள் வெளிநாட்டுத் துறையில் தொடர்ச்சியான சாதகமான உத்வேகத்திற்கு பங்களித்திருக்கக்கூடும். ஆகையினால், 2024ஆம் ஆண்டில், வெளிநாட்டு நடைமுறைக் கணக்கில் சிறிதளவு மிகையும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## 2.3. எறிவுகளுக்கான இடர்நேர்வுகள்

பணவீக்கம் மற்றும் மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி ஆகிய இரண்டிற்குமான அடிப்படை எறிவுகளுக்கு மேல்நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் ஆகிய இரண்டுமே காணப்படுகின்றன. 2024 யூலையில் நாணயக் கொள்கைச் சுற்றிற்கமைவாக அத்தகைய இடர்நேர்வுகளின் வெளிப்படுத்துகை இப்பிரிவில் வழங்கப்படுகின்றது.

### பணவீக்க எறிவுகளுக்கான இடர்நேர்வுகள்

கீழ் நோக்கிய இடர்நேர்வுகளைக் கருத்திற்கொள்கின்றபோது, மக்களின் குறைவடைந்துவரும் கொள்வனவுச் சக்தியின் நீடித்த தாக்கம் தொடர்ச்சியாக குறைவான நுகர்வோர் செலவிடலுக்கு வழிவகுக்கக்கூடும். இதன் விளைவாக, கேள்வியில் கீழ் நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தும். நடுத்தரக் காலத்தில் புவிசார் அரசியல் பதற்றங்களின் சாத்தியான தளர்வடைதலானது உலகளாவிய பொருளாதார நிச்சயமற்றதன்மைகளையும் வர்த்தக இடையூறுகளையும் குறைக்கக்கூடும். இது, பண்டங்களுக்கான விலைகள் மீதும் ஏனைய பொருட்கள் மீதும் மேல்நோக்கிய அழுத்தங்களை தளர்வடையச்செய்யலாம். குறைவான வலு செலவுகள் உற்பத்தியையும் போக்குவரத்துச் செலவினங்களையும் குறைக்கின்றமையால் வலு விலை குறைப்புக்களின் எதிர்பார்த்ததைவிட அதிகமான சாத்தியமான கசிவுகள் ஏனைய பொருட்கள் மற்றும் பணிகளின் விலைகளில் பரந்தளவான குறைப்புக்களை தோற்றுவிக்கக்கூடும.

எறிவுசெய்யப்பட்ட பாதையை விட உயர்வான பாதையில் பணவீக்கத்தை சாத்தியமான விதத்தில் வழிநடத்தக்கூடிய மேல்நோக்கிய இடர்நேர்வுகளும் இங்கே காணப்படுகின்றன. ஒருபுறத்தில் கடந்த விலை அதிகரிப்புக்களின் காரணமாக அதிகரித்த விலை மட்டங்கள், மந்தமடைந்த பொருளாதார நடவடிக்கைகள் மற்றும் இறுக்கமான இறை நிலைமைகள் உண்மை வருமான மட்டங்கள் மீது தொடர்ச்சியான அழுத்தத்தை ஏற்படுத்தியமையாலும் அத்துடன் மறுபுறத்தில் பல துறைகளிலுள்ள திறமைசாலிகள் வெளியேறுதலானது தொழில்களிலுள்ள அலுவலர்களை தக்கவைப்பதற்கான வழிமுறைகள் அவசியப்படுத்தப்பட்டமையினாலும் உயர்ந்தளவிலான கூலிகளுக்கான கேள்விகள் அடையப்படுவதற்கான சாத்தியப்பாடு காணப்படுகின்றது. இத்தகைய அதிகரித்த செலவுகளை நுகர்வோர்களுக்கு கடத்துவதனால் மேலதிக விலை அதிகரிப்புகளுக்கு இது வழிவகுக்கக்கூடும். சாத்தியமான பாதகமான வானிலை நிலைமைகள் வேளாண்மை உற்பத்தியை பாதகமாக பாதிக்கக்கூடும். இது, உணவு பணவீக்கத்தின் மீது மேல்நோக்கிய அழுத்தத்தை உருவாக்கலாம். பெறுமானத்தேய்வு அழுத்தங்களின் ஏதேனும் சாத்தியத்தன்மையின் காரணமாக பணவீக்கத்திற்கான மேல்நோக்கிய இடர்நேர்வுகள் எழக்கூடும். மேலும், எதிர்பார்க்கப்படும் இறைத் திரட்சிப் பாதையிலிருந்தான ஏதேனும் விலகலானது அதிகரித்த (அல்லது எதிர்பார்க்கப்பட்டதை விட குறைவாக மட்டுப்படுத்தப்பட்ட) நுகர்வினூடாக பணவீக்க அழுத்தங்களுக்கு வழிவகுக்கக்கூடும். இதற்கு மேலதிகமாக, அண்மைய

காலத்தில் உலகளாவிய எண்ணெய் விலைகள் சில தளம்பளுக்கு உள்ளாகியிருந்ததுடன் அண்மைய புவிசார் அரசியல் பதற்றங்களின் அதிகரிப்பு அதையொத்த தொடர்ச்சியை தோற்றுவிக்கக்கூடும். மேலும், குறிப்பாக அண்மைய காலத்தில், உள்நாட்டு விலை மட்டங்களை சாத்தியமானளவில் அதிகரிக்கக்கூடிய உலகளாவிய எண்ணெய் விலைகளுக்கான சில மேல்நோக்கிய இடர்நேர்வுகளும் காணப்படுகின்றன.

அதிகரித்த புவிசார் அரசியல் நிச்சயமற்றதன்மை மற்றும் உலகளாவிய விலை மட்டங்கள் அதிகரிக்கின்ற தொடர்பான சாத்தியத்தன்மைக்கும் மத்தியில் உலகளாவிய எண்ணெய் மற்றும் உணவு விலைகளின் அதிகரித்த தளம்பல், இலங்கை ரூபாயின் மீதான சாத்தியமான பெறுமானத்தேய்வு அழுத்தம், உணவு பணவீக்கம் தொடர்பில் பாதகமான வானிலையின் தாக்கம் போன்றவற்றை கருத்திற்கொண்டு அண்மைய காலத்தில் பணவீக்க எறிவுகளுக்கான இடர்நேர்வுகள் மேல்நோக்கி சார்ந்திருக்குமென மதிப்பிடப்படுகின்றன. எவ்வாறாயினும், நடுத்தரக் காலத்தில், பணவீக்க எறிவுகளுக்கான இடர்நேர்வுகள் சமநிலையாயிருக்குமென மதிப்பிடப்படுகின்றன. இங்கே, மேல் நோக்கிய மற்றும் கீழ்நோக்கிய இடர்நேர்வுகள் இரண்டும் விலை மட்டங்கள் மீது சாத்தியமான அழுத்தங்களை ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**பொருளாதார வளர்ச்சி எறிவுகளுக்கான இடர்நேர்வுகள்**

நடுத்தர காலத்தில் பொருளாதார எறிவுகளுக்குச் சாத்தியமான பிரதான கீழ்நோக்கிய இடர்நேர்வுகளானது ஏனையவற்றிற்கு மத்தியில், தொழிலாளர் பற்றாக்குறைகளுக்கும் குறைவான உற்பத்தித்திறனுக்கும் வழிவகுக்கின்ற திறைமைசாலிகள் வெளியேறுதல்; தொழில் எண்ணப்பாங்கு மீதும் பொருளாதார மீட்சி மீதும் பாதகமான தாக்கங்களைக் கொண்ட ஏதேனும் அரசியல்ரீதியான நிச்சயமற்றதன்மை; தொடர்ச்சியாக காணப்பட்ட பிரதான ஏற்றுமதிகளுக்கான குறைந்தளவான உலகளாவிய கேள்வி குறிப்பாக பாரிய பொருளாதாரங்களுக்கிடையில் வர்த்தக தொடர்புகளில் ஏற்பட்ட பிரச்சினைகள்; மற்றும் உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீதான அதன் தாக்கம்; அதிகரித்த புவிசார் பதற்றங்கள் மற்றும் வானிலை முரண்பாடுகள் மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை பாதகமான விதத்தில் தாக்கம்செலுத்துகின்ற காலநிலை மாற்றம் என்பவற்றை உள்ளடக்குகின்றன.


பன்னாட்டு நாணய நிதிய விரிவாக்கப்பட்ட நிதிய வசதியின் தொடர்ச்சியான ஏற்பாடும் எதிர்பார்க்கப்பட்ட கட்டமைப்புச் சீர்திருத்தங்களின் முன்னேற்றமும் ஒட்டுமொத்த பேரண்டப்பொருளாதார உறுதிப்பாட்டையும் வளர்ச்சியையும் தாக்கம்செலுத்துகின்ற முக்கிய காரணியாக காணப்படுகின்றது. இப்பாதையிலிருந்து குறிப்பிடத்தக்க விலகலும் தொடர்ச்சியான கொள்கை பின்னடைவுகளும் தடம்புரள்கின்ற வளர்ச்சி, நம்பிக்கை இழப்பு, மற்றும் நீட்சியடைந்த பாதகமான முதலீட்டாளர் எண்ணப்பாங்குகள் என்பவற்றின் காரணமாக நாட்டிற்கு அதிக பொருளாதாரச் செலவுகளை உருவாக்கக்கூடும்.

மாறாக, மீதமுள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளின் அகற்றலின் மூலம் இறக்குமதியில் தங்கியிருக்கும் வியாபாரங்கள் மீட்சியடையக்கூடும். பாரியளவான மூலதன உட்கட்டமைப்பு அபிவிருத்திகளுடன் தொடர்புடைய நடவடிக்கையை மேம்படுத்துதலென்பது ஒட்டுமொத்த பொருளாதாரச் செயலாற்றத்தையும் முன்னேற்றுவதற்கு பங்களிப்புச்செய்யக்கூடும். சுற்றுலாத்துறையின் எதிர்பார்க்கப்பட்டதைவிட விரைவான மீட்சியானது தொடர்பான துறைகளை மேம்படுத்துதல், வேலைவாய்ப்பினை அதிகரித்தல், மற்றும் நுகர்வோர் செலவிடலை தூண்டுதலின் மூலம் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தக்கூடிய சாதகமான கசிவுத்தாக்கங்களை உருவாக்கலாம். மேலும், தெரிவுசெய்யப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் உடைமைகளை மாற்றுதலிலிருந்தான சாதகமான கசிவுத்தாக்கங்களும்

வெற்றிகரமான படுகடன் மறுசீரமைப்பிலிருந்தான சாதகமான எண்ணப்பாங்குகளும் பொருளாதார வளர்ச்சி உத்வேகத்தை சாதகமாகப் பாதிக்கலாம்.


ஒட்டுமொத்தமாக, அண்மைய காலம் மற்றும் நடுத்தரக் காலம் இரண்டிலும் வளர்ச்சி எறிவுகளுக்கான இடர்நேர்வுகள் சமநிலையாகவிருக்குமென மதிப்பிடப்படுகின்றன. இம்மதிப்பீடானது கீழ் நோக்கிய இடர்நேர்வுகளின் காரணமாக எழுகின்ற இடர்நேர்வுகள் மீது எதிரீட்டுத் தாக்கத்தை கொண்ட வளர்ச்சி எறிவுகள் மீதான மேல்நோக்கிய இடர்நேர்வுகளின் சாத்தியத்தன்மையினால் ஊக்குவிக்கப்படுகின்றது. கடந்த நாணயக் கொள்கை அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்ட எறிவுகளுடன் ஒப்பிடுகையில் (நாணயக் கொள்கை அறிக்கை – பெப்புருவரி 2024) 2024 யூலை நாணயக் கொள்கை சுழற்சியில் மேல்நோக்கிய இடர்நேர்வுகளின் தாக்கம் அதிகமாக இருக்குமென மதிப்பிடப்படுகின்றது. இதனால் இடர்நேர்வு மதிப்பீடு சமநிலையானதாக தரமுயர்த்தப்படுகின்றது.

**வரைபடம் 05: எறிவுகளுக்கான இடர்நேர்வுகளின் சமநிலை**




மூலம் : மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

**வரைபடம் 06: உலகளாவிய எறிவுகள் (காலாண்டு ரீதியாக)**




2024 சனவரி நாணயக் கொள்கைச் சுற்று (2024 பெப்புருவரி நா.கொ.அ) 2024 யூலை நாணயக் கொள்கைச் சுற்று (2024 ஓகத்து நா.கொ.அ)

மூலங்கள்: காலாண்டு எறிவு மாதிரி, உலக எறிவு மாதிரி வலையமைப்பு (2024/01/05 மற்றும் 2024/06/26 அன்று இற்றைப்படுத்தப்பட்டது.)

## 2.4. முன்னைய எதிர்வுகூறல்களுடனான ஒப்பீடு[8]

**நடுத்தர கால எறிவுகளுக்குப் பயன்படுத்தப்படும் முக்கிய எடுகோள்கள்**

2024 யூலையில் நாணயக் கொள்கைச் சுற்றில் பயன்படுத்தப்படும் உலகளாவிய எறிவுகளின் அடிப்படையில், இலங்கையின் பிரதான வர்த்தக பங்காளர்களின் ஏற்றுமதி நிறையேற்றப்பட்ட வெளிநாட்டு வெளியீட்டு இடைவெளிக்கான தோற்றப்பாடு 2024 சனவரியின் கிடைக்கத்தக்க தகவல்களுடன் ஒப்பிடுகையில் முன்னேற்றமடைந்தது. இம்மேம்பாட்டிற்கு முக்கியமாக ஐக்கிய அமெரிக்கா, யூரோ வலயம் மற்றும் ஐக்கிய இராச்சிய நாடுகளின் எறிவுகளின் முன்னேற்றம் காரணமாகமைந்தது. 2024 யூலை காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்ட உலகளாவிய எறிவுகள் 2024 சனவரியின் நாணயக் கொள்கைச் சுற்றுடன் ஒப்பிடுகையில் உணவுப் பணவீக்கத்தில் மெதுவான அதிகரிப்பொன்றை எதிர்வுகூறுகின்றது. தற்போது பாதகமாக மதிப்பிடப்படும் உலக உணவுப் பணவீக்கமானது 2024இன் நான்காம் காலாண்டில் சாதகமாக மாறுமெனவும் அதன்பின்னர் நிலையாகவிருக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. 2024இன் இரண்டாம் காலாண்டில் உலக எண்ணெய் விலைகளானது 2024சனவரியில் எறிவுசெய்யப்பட்ட மட்டங்களுடன் ஒப்பிடுகையில் அதிகரித்த மட்டத்தில் காணப்படுகின்றது. இப்போக்கானது

[8] 2024ஆம் ஆண்டு சனவரியின் நாணயக் கொள்கைச் சுற்றிலுள்ளவாறு தகவல்களையும் எறிவுகளையும் அடிப்படையாகக் கொண்ட 2024 பெப்புருவரி நாணயக் கொள்கை அறிக்கையில் வெளியிடப்பட்டவற்றுடன் தற்போதைய அடிப்படை எதிர்வுகூறல்களை இப்பிரிவு ஒப்பிடுகின்றது.

குறுங்காலத்தில் தொடர்ச்சியாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டு, முன்னர் எதிர்பார்க்கப்பட்டதை விட உலக எண்ணெய் விலைகளை சற்று உயர்ந்தளவான எறிவுசெய்யப்பட்ட பாதைக்கு இட்டுச்செல்வதற்கு வழிவகுக்கின்றது. அதேவேளை, ஐக்கிய அமெரிக்க பெடரல் றிசேர்வின் எச்சரிக்கையான அணுகுமுறைக்கு மத்தியில் ஐக்கிய அமெரிக்காவில் நாணயக் கொள்கையை தளர்த்துதல் என்பது முன்னர் எறிவுசெய்யப்பட்டதை விட மெதுவாகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இறைப் பாதையானது 2024 சனவரி நாணயக் கொள்கைச் சுற்றுடன் ஒப்பிடுகையில் முக்கியமாக 2024ஆம் ஆண்டிற்கான தற்போதைய எறிவுகளில் திருத்தப்பட்டுள்ளன. 2024ஆம் ஆண்டிற்கான இறை மீதியானது முன்னைய எறிவுகளுடன் ஒப்பிடுகையில் அரசிறையில் எதிர்பார்க்கப்படும் அதிகரிப்பினால் முக்கியமாக தூண்டப்பட்டு முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சென்மதி நிலுவைகளின் நடைமுறைக் கணக்கு நிலுவை மீதான ஊகங்கள் புதிய தகவல்களை பிரதிபலிப்பதற்கு மீள்திருத்தப்பட்டுள்ளன. இதற்கமைய, 2024ஆம் ஆண்டிற்கான நடைமுறைக் கணக்கில் ஏற்பட்ட மிகையானது குறிப்பாக ஆண்டின் பின்னைய பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட அதிகரித்த இறக்குமதிகளின் காரணமாக 2024 சனவரியில் மதிப்பிடப்பட்ட மட்டத்தை விட குறைவானதாக தற்போது எறிவுசெய்யப்படுகின்றது.

**பணவீக்கப் பாதை**

2024 பெப்புருவரியில் வெளியிடப்பட்ட எறிவுகளுடன் ஒப்பிடுகையில், அடையப்பட்ட ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கமானது 2024 – முதலாம் காலாண்டு மற்றும் 2024 – இரண்டாம் காலாண்டு ஆகிய இரு காலப்பகுதியிலும் எறிவுசெய்யப்பட்ட மட்டங்களுக்கு கீழாக காணப்பட்டது. இதற்கு எதிர்பார்க்கப்பட்டதை விட குறைவாகவிருந்த பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சீர்திருத்தங்களின் மீதான பணவீக்கத்தின் தாக்கமும் கணிசமான மின்சார தீர்வைக் குறைப்புக்களும் முக்கிய காரணமாக காணப்பட்டது. 2024 சனவரியில் வரிகளுக்கான அதிகரிப்புக்களின் பணவீக்கத் தாக்கமானது சனவரி 2024 நாணயக் கொள்கைச் சுற்றின் பணவீக்க எறிவுகளுக்குள் ஒருங்கிணைக்கப்பட்டது. எவ்வாறாயினும், அத்தகைய வரி அதிகரிப்புக்களின் அடையப்பட்ட தாக்கமானது ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டவாறு பாரியளவாக இல்லாமல் காணப்பட்டதுடன் அலுவலர் தீர்மானத்தில் கருத்திற்கொள்ளப்பட்ட சில பெறுமதிசேர்க்கப்பட்ட வரி விலக்கல்களின் நீக்கல்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை. நிலவிய தொடர்ச்சியாக நலிவடைந்த கேள்வி நிலைமைகள் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி அதிகரிப்பின் முழுமைப்படுத்தப்படாத ஊடுகடத்தலுக்குப் பங்களிப்புச் செய்திருக்கக்கூடும். இங்கு, வணிகர்கள் குறிப்பிடத்தக்களவில் விலைகளை அதிகரிப்பதற்கு தயங்கியிருந்தனர். அதேவேளை, 2024 மாச்சில் அடையப்பட்ட மின்சார தீர்வை குறைப்பானது சனவரி 2024 நாணயக் கொள்கைச் சுற்றின் எறிவுகளில் உள்வாங்கப்பட்ட சீராக்கத்தை விட உயர்வானதாக காணப்பட்டது. மேலும், 2024 யூலையில் மேற்கொள்ளப்பட்ட மின்சார தீர்வை குறைப்பு பற்றிய தகவல்களானது 2024 சனவரி நாணயக்கொள்கைச் சுற்றின் போது கிடைப்பனவாகவிருக்கவில்லை. எனவே, 2024இன் மூன்றாம் காலாண்டில் எறிவுசெய்யப்பட்ட பணவீக்கப் பாதையும் முன்னைய பாதையிலிருந்து வேறுபடுகின்றது. 2024இன் மூன்றாம் காலாண்டில் சாதகமற்ற தளத்தாக்கத்தினால் உந்தப்பட்டு பணவீக்கம் தற்காலிக மேல்நோக்கிய அசைவை அனுபவித்திருக்கக்கூடும் என முன்னைய எறிவுகள் எடுத்துக்காட்டின. எவ்வாறாயினும், முக்கியமாக பாரிய மின்சார தீர்வைக் குறைப்பால உந்தப்பட்டு, 2024இன் மூன்றாம் காலாண்டில் காலாண்டிற்குக் காலாண்டு பணவீக்க வீழ்ச்சியின் தாக்கம் சாதகமற்ற புள்ளவிபரத் தளத்தாக்கத்திற்கு எதிரீடுசெய்திருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது 2024இன் மூன்றாம் காலாண்டிற்கான மந்தமடைந்த ஆண்டிற்கு ஆண்டு பணவீக்க எறிவிற்கு வழிவகுத்தது. இதற்கு மேலதிகமாக, எரிபொருள் மற்றும் திரவத்தன்மை எரிவாய்வுகளுக்கான படிப்படியான கீழ்நோக்கிய திருத்தங்களும் அதேபோன்று தளம்பலடைந்த உணவு விலைகளின் வீழ்ச்சி என்பன முன்னர் எறிவுசெய்யப்பட்ட பாதையிலிருந்து விலகி அடையப்பட்ட பணவீக்கத்திற்கு பங்களிப்புசெய்திருந்தது. 2024இன் முதலாம் காலாண்டின் பெறுமதிசேர்க்கப்பட்ட


வரியிலிருந்து தோற்றுவிக்கப்பட்ட புள்ளிவிபரத் தளத் தாக்கத்தின் காரணமாக 2025இன் ஆரம்பத்தில் பணவீக்கத்தின் முன்னர் எதிர்பார்க்கப்படும் மெதுவடைவு தற்போதைய எறிவுகளிலும் நடப்பிலுள்ளது. எவ்வாறாயினும், 2024 சனவரி எறிவுகளைப் போலல்லாமல், அண்மைய மின்சார தீர்வை குறைப்பின் காரணமாக ஏற்பட்ட சாதகமற்ற தளத்தாக்கமானது 2025இன் மூன்றாம் காலாண்டில் இலக்கிடப்பட்ட ஆண்டிற்காண்டு முதன்மைப் பணவீக்கத்தை தற்காலிகமாக உயர்த்துமென எதிர்பார்க்கப்படுகின்றது. இருப்பினும், முன்னைய எறிவைப் போன்று, பணவீக்கமானது நடுத்தர காலத்தில் இலக்கைச் சுற்றி படிப்படியாக நிலைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

# 3. தற்போதைய பொருளாதார அபிவிருத்திகள்

## 3.1. பணவீக்கம்

***2024 ஆரம்பத்தில் பெறுமதிசேர் வரி அதிகரிப்பின் காரணமாக தற்காலிக உயர்வினைப் பதிவுசெய்த முதன்மைப் பணவீக்கமானது மெதுவடைந்த கேள்வி அழுத்தங்களுக்கு மத்தியில், உணவு, எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகளின் தளர்த்தலுடன் கீழ்நோக்கிய மின்சாரக் கட்டணத் திருத்தங்களினால் பங்களிக்கப்பட்டு அதன்பின்னர் குறைவடைந்து 5 சதவீதம் கொண்ட பணவீக்க இலக்கிற்கு கீழாகக் காணப்பட்டது.***

**வரைபடம் 07: முதன்மை மற்றும் மைய பணவீக்கத்தின் அசைவுகள் (கொ.நு.வி.சுட்டெண், 2021=100)**





மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

பல்வேறு நிரம்பல் பக்க காரணிகள் காரணமாக 2023ஆம் ஆண்டின் பிற்பகுதியில் உயர்வடைந்த கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை (கொ.நு.வி.சு 2021=100) அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு), பிரதானமாக பெறுமதிசேர் வரி வீதத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு மற்றும் பல்வேறு பெறுமதிசேர் வரி விலக்குகளின் நீக்குதல் மூலம் உந்தப்பட்டு 2024ஆம் ஆண்டு சனவரியில் 6.4 சதவீதமான உயர்மட்டத்தை எட்டியது, எனினும், 2024 மாச்சில் மின்சார தீர்வைகளுக்கான குறிப்பிடத்தக்க கீழ்நோக்கிய திருத்தமொன்றின் நடைமுறைப்படுத்தலுடன் முதன்மைப் பணவீக்கம் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்தது. மேலும், பணவீக்கம் மீதான பெறுமதிசேர் வரி மாற்றத்தின் நேரடி மற்றும் இரண்டாம் சுற்று தாக்கமானது குறைவான கேள்விக்கு மத்தியில் தொடக்கத்தில் எதிர்பார்த்தளவிற்கு பரியளவில் காணப்படவில்லை. உணவு விலைகளிலுள்ள மெதுவடைதலும் முதன்மைப் பணவீக்கத்தின் வீழ்ச்சிக்கு ஆதரவளித்தது. இதற்கு மேலதிகமாக, பல்வேறு சுற்றுக்களில் மேற்கொள்ளப்பட்ட உள்நாட்டு எரிபொருள் மற்றும் எரிவாயு விலைகளுக்கான கீழ்நோக்கிய திருத்தங்களும் தொடர்ச்சியான பணவீக்க வீழ்ச்சிக்கு பங்களிப்புச்செய்தன. இதற்கமைய, கொ.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமானது 2024 யூனில் 1.7 சதவீதமாகப் (ஆண்டிற்கு ஆண்டு) பதிவுசெய்யப்பட்டது.[9] கொ.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையிலான

[9] கொ.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட பணவீக்கமானது 2024 யூலையில் 2.4 சதவீதமாகப் (ஆண்டிற்கு ஆண்டு) பதிவுசெய்யப்பட்டது.


உணவு மற்றும் உணவல்லாப் பணவீக்கம் என்பன 2024 யூனில் குறைவாகவே காணப்பட்டது. இவ் அபிவிருத்திகளுடன், கொ.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கத்தின்

**வரைபடம் 08: மாதாந்த முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண்)**




மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்


**வரைபடம் 09: வகைப்பாட்டு ரீதியிலான ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்கம் (கொ.நு.வி.சுட்டெண், %)**




குறிப்பு: அடிப்படை நிறைகள் அடைப்புக்குறிக்குள் தரப்பட்டுள்ளன.

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

**வரைபடம் 10: ஆண்டுக்காண்டு முதன்மைப் பணவீக்கத்திற்கான பங்களிப்பு (கொ.நு.வி.சுட்டெண்)**




மூலங்கள்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
மத்திய வங்கி அலுவலர் கணிப்புக்கள்

காலாண்டுச் சராசரியானது முன்னைய காலாண்டின் 4.4 சதவீதத்திலிருந்து 2024ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 1.4 சதவீதத்திற்கு குறைவடைந்தது. இதற்கமைய, 2024ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டு பகுதியில் அடையப்பட்ட காலாண்டு முதன்மைப் பணவீக்கமானது நாணயக் கொள்கை கட்டமைப்பு உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட பணவீக்க இலக்கின் 2.0 சதவீதப் புள்ளிகளைவிடக் குறைவாகவே காணப்பட்டது. அதேவேளை, தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட (தே.நு.வி.சு, 2021=100) முதன்மைப் பணவீக்கமும் (ஆண்டிற்கு ஆண்டு) 2024 சனவரியின் 6.5 சதவீதத்திலிருந்து 2024 யூனில் 2.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

பொருளாதாரத்தின் அடிப்படைப் பணவீக்கப் போக்குகளைப் பிரதிபலிக்கின்ற கொ.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2024ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் படிப்படியாக உயர்வடைந்து, 2024 யூனில் 4.4 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது.[10] சாதகமற்ற அடிப்படைத் தாக்கங்களுடன் இணைந்து பெறுமதிசேர் கட்டமைப்பிற்கான மாற்றங்களினால் இது பங்களிப்புச் செய்யப்பட்டது. அதேவேளை, தே.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கம் (ஆண்டிற்கு ஆண்டு) 2024 யூனில் 3.9 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது.

***2024ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் (2018=100) மற்றும் பொதுத் துறை கூலி வீதச் சுட்டெண் (2016=100) இரண்டும் அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தன.***


2023ஆம் ஆண்டில் அவதானிக்கப்பட்ட பெயரளவு கூலிகளிலுள்ள மேல்நோக்கிய போக்கைத் தொடர்ந்து, முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண் 2024ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் ஒட்டுமொத்த அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இவ்வதிகரிப்பானது குறிப்பாக வேளாண்மை மற்றும் பணிகள்

[10] கொ.நு.வி.சுட்டெண்ணை அடிப்படையாகக் கொண்ட மையப் பணவீக்கமானது 2024 யூலையில் 4.4 சதவீதமாகப் (ஆண்டிற்கு ஆண்டு) பதிவுசெய்யப்பட்டது

நடவடிக்கைகளிலுள்ள உயர்ந்தளவான வளர்ச்சியுடன் அனைத்து முக்கிய மூன்று பொருளாதார நடவடிக்கைகளிலும் அவதானிக்கப்பட்டது. இருப்பினும், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், பெயரளவிலான முறைசாரா தனியார் துறைக் கூலி வீதச் சுட்டெண்ணின் வளர்ச்சியானது 2023ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 2024ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் பணவீக்க அழுத்தத்தை தளர்த்தியத்திற்கிணங்க மெதுவடைந்து காணப்பட்டது. மேலும், ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில், உண்மை முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண் பணவீக்கத்தின் தொடர்ச்சியான வீழ்ச்சியுடன் 2024ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் தொடர்ந்தும் உயர்வடைந்தது.

2024 சனவரி மற்றும் ஏப்பிறலில் பொதுத் துறை ஊழியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப்படியில் ஏற்பட்ட அதிகரிப்புடன் பொதுத் துறை கூலி வீதச் சுட்டெண் 2024 ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் அதிகரித்து காணப்பட்டது. அதேவேளை, பணவீக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக உண்மை கூலியின் குறைப்பு கட்டுப்படுத்தப்பட்டது.

**வரைபடம் 11: முறைசாரா தனியார் துறை கூலி வீதச் சுட்டெண் (2018=100) மற்றும் பொதுத்துறை கூலி வீதச் சுட்டெண்ணின் (2016=100) அசைவுகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### 3.2. உண்மைத் துறை

***இலங்கைப் பொருளாதாரமானது தொடர்ச்சியாக மூன்றாவது காலாண்டாக 2024இன் முதலாம் காலாண்டில் அதன் நேர்மறையான வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடர்ந்தது.***

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொ.உ.உற்பத்தி மதிப்பீடுகளின் பிரகாரம், சகல மூன்று முக்கிய துறைகளாலும் பதிவுசெய்யப்பட்ட நேர்மறையான வளர்ச்சியுடன் இணைந்து இலங்கைப் பொருளாதாரமானது 2023இன் முதலாம் காலாண்டில் பதிவுசெய்யப்பட்ட 10.7 சதவீதம் கொண்ட சுருக்கத்துடன் (ஆண்டிற்கு ஆண்டு) ஒப்பிடுகையில் 2024இன் முதலாம் காலாண்டில் 5.3 சதவீதத்தினால் (ஆண்டிற்கு ஆண்டு) வளர்ச்சியடைந்து காணப்பட்டது.

இக்காலப்பகுதியில் மீன்பிடி, விலங்கு உற்பத்தி மற்றும் தானிய வளர்ப்பு என்பவற்றினால் உந்தப்பட்டு வேளாண்மை நடவடிக்கைகள் மிதமான விரிவாக்கமொன்றினைப் பதிவுசெய்தன. கைத்தொழில் நடவடிக்கைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியானது தயாரிப்பு, கட்டடவாக்கம் மற்றும் சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல் நடவடிக்கைகள் என்பவற்றினால் உந்தப்பட்டுக் காணப்பட்டது. தங்குமிடம், போக்குவரத்து, மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், உண்மைச் சொத்து மற்றும் காப்புறுதிப்

பணிகள் என்பவற்றின் நேர்மறையான செயலாற்றங்கள் பணிகள் நடவடிக்கைகளில் ஏற்பட்ட வளர்ச்சிக்கான முக்கிய பங்காளர்களாகக் காணப்பட்டன.


**அட்டவணை 02: உண்மை மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கான மதிப்பீடுகள் (ஆண்டிற்கு ஆண்டு, %) (தற்காலிகமானது)**

| பொருளாதார நடவடிக்கை | 2023 | | | | | 2024 |
|---|---|---|---|---|---|---|
| | கா1 | கா2 | கா3 | கா4 | வருடாந்த | கா1 |
| வேளாண்மை | 1.6 | 4.2 | 4.2 | 0.6 | 2.6 | 1.1 |
| கைத்தொழில் | -24.3 | -11.7 | -0.7 | 7.9 | -9.2 | 11.8 |
| பணிகள் | -4.6 | -0.5 | 1.7 | 2.8 | -0.2 | 2.6 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **-10.7** | **-3.0** | **1.6** | **4.5** | **-2.3** | **5.3** |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

வளர்ச்சியானது கைத்தொழில் மற்றும் பணிகள் நடவடிக்கைகளினால் பாரியளவில் உந்தப்பட்டுக் காணப்படுமென எதிர்பார்க்கப்படுவதுடன் 2024இன் இரண்டாம் காலாண்டுப் பகுதியில் பொருளாதாரம் அதன் நேர்மறையான வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடர்ந்தும் முன்னெடுக்குமென முன்கூட்டிய குறிகாட்டிகள் சுட்டிக்காட்டுகின்றன. கைத்தொழில் உற்பத்திச் சுட்டெண்ணானது இரண்டாம் காலாண்டுப் பகுதியில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையொன்றில் அதிகரித்துக் காணப்பட்டது. ஏப்பிறலில் ஏற்பட்ட பருவகால சரிவிற்கு மத்தியில், தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணானது 2024 மே மற்றும் யூன் ஆகிய மாதங்களில் மாதாந்த அடிப்படையொன்றில் வலுவாக வளர்ச்சியடைந்து, தயாரிப்பு நடவடிக்கைகளின் நேர்மறையான அபிவிருத்திகளைப் பிரதிபலித்தது. மேலும், 2024 ஏப்பிறலில் பருவகால வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்த கட்டடவாக்கக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணும் கட்டடவாக்க நடவடிக்கைகளின் படிப்படியான மீளாரம்பத்தினைப் பிரதிபலிக்கும் வகையில் 2024 மே மற்றும் யூன் ஆகிய மாதங்களில் விரிவடைந்து காணப்பட்டது. அதேவேளை, பணிகள் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்ணினால் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்) சமிக்ஞை செய்யப்பட்டவாறு பணிகள் நடவடிக்கைகளும் 2024இன் இரண்டாம் காலாண்டில் நேர்மறையான வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக, தங்குமிடம், உணவு மற்றும் குடிபானப் பணிகள் மற்றும் போக்குவரத்து நடவடிக்கைகள் என்பவற்றுடன் தொடர்புடைய பல்வேறு முக்கிய நடவடிக்கைள் மீதான நேர்மறையான கசிவுத் தாக்கங்களைச் சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் உயர்வடைந்த மட்டங்கள் கொண்டிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. சவால்மிக்க வானிலை நிலைமைகளுக்கு மத்தியில் வேளாண்மை நடவடிக்கைகள் கலப்பான செயலாற்றத்தினை வெளிப்படுத்துமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வரைபடம் 12: கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்களின் அசைவுகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

செலவுப் பக்கத்தில், நிலையான விலைகளில் 2024இன் முதலாம் காலாண்டில் பாரியளவிலான செலவுக் கூறான நுகர்வுச் செலவினமானது வளர்ச்சியடைந்த அதேவேளை முதலீட்டுச் செலவினமானது மீளெழுச்சியடைந்ததுடன் அதன்மூலம் ஒட்டுமொத்த பொருளாதாரக் கேள்வியும் தூண்டப்பட்டது. பொருட்கள் மற்றும் பணிகள் என்பவற்றின் ஏற்றுமதி வளர்ச்சி வேகமானது பொருட்கள் மற்றும் பணிகள் என்பவற்றின் இறக்குமதி வளர்ச்சி வேகத்தினை விஞ்சிக் காணப்பட்டமையினால் 2024இன் முதலாம் காலாண்டுப் பகுதியில் தேறிய வெளிநாட்டுக் கேள்வியானது மேம்பட்டுக் காணப்பட்டது.

**அட்டவணை 03: கூட்டுக் கேள்வி (தற்காலிகமானது)**

| விடயம் | நிலையான (2015) விலைகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2023 | | 2023 கா1 | | 2024 கா1 | |
| | ரூ. பில் | ஆண்டிற்கு ஆண்டு, % | ரூ. பில் | ஆண்டிற்கு ஆண்டு, % | ரூ. பில் | ஆண்டிற்கு ஆண்டு, % |
| உள்நாட்டு கேள்வி | 11,739 | -3.4 | 3,128 | -15.0 | 3,280 | 4.9 |
| நுகர்வு | 9,078 | -2.2 | 2,329 | -11.0 | 2,342 | 0.5 |
| முதலீடு (மொத்த மூலதன உருவாக்கம்) | 2,661 | -7.4 | 799 | -25.0 | 939 | 17.6 |
| தேறிய வெளிநாட்டுக் கேள்வி | 142 | 1,462.6 | 34 | 124.4 | 49 | 43.4 |
| +பொருட்கள் மற்றும் பணிகளின் ஏற்றுமதிகள் | 2,667 | 12.0 | 657 | 8.4 | 779 | 18.6 |
| -பொருட்கள் மற்றும் பணிகளின் இறக்குமதிகள் | 2,524 | 6.5 | 622 | -16.5 | 730 | 17.3 |
| **மொத்த உள்நாட்டு உற்பத்தி** | **11,882** | **-2.3** | **3,162** | **-10.7** | **3,330** | **5.3** |

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்


## 3.3. நாணயத் துறை

### வட்டி வீதங்கள்

***மத்திய வங்கியின் தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டின் பிரகாரம், சந்தை வட்டி வீதங்கள் 2024இன் இதுவரையான காலப்பகுதியில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. இருப்பினும், சந்தை கடன்வழங்கல் வட்டி வீதங்கள் மேலும் குறைவடைவதற்கான இடம் இன்னமும் காணப்படுகின்றது.***

2023ஆம் ஆண்டு யூனிலிருந்து இடம்பெற்று வருகின்ற தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலையின் படிப்படியான ஊடுகடத்தலுடன் ஒட்டுமொத்த வட்டி வீதக் கட்டமைப்பு தொடர்ந்தும் கீழ்நோக்கி சீராக்கப்பட்டது. தளர்த்தப்பட்ட நாணய மற்றும் மேம்பட்ட திரவத்தன்மை நிலைமைகளுக்கு பதிலிறுத்தும் வகையில் சந்தை வைப்பு வட்டி வீதங்கள் குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்துள்ள அதேவேளை சந்தை கடன்வழங்கல் வட்டி வீதங்களின் குறைப்பானது குறைக்கப்பட்ட நிதியிடல் செலவுகளினூடாக வியாபாரங்கள் மற்றும் குடியிருப்புகள் மீதான சுமையை தளர்த்தியிருக்குமென நம்பப்படுகின்றது. குறிப்பாக, சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மைக் கடன்வழங்கல் வீதத்தால் அளவிடப்பட்டவாறு, முதன்மை வாடிக்கையாளர்களுக்கான கடன்வழங்கல் மீதான வட்டி வீதங்கள் 2024 யூலை பிற்பகுதியில் நெருக்கடிக்கு முந்தைய மட்டங்களுக்கு குறைவடைந்தது. எனினும், சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கான கடன்கள் மற்றும் சில்லறை கடன்கள் மீதான சந்தை வட்டி வீதங்களில் ஏற்பட்ட குறைப்பு, அதற்கான வைப்பு வீதங்களுடன் ஒப்பிடுகையில் மட்டுப்பட்டு காணப்படுகின்றது. புதிய கடன்கள் மற்றும் வைப்புக்களுக்கிடையிலான வட்டி வீத வீச்சு, முறையே சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன்வழங்கல் வீதம் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதத்தால் பிரதிபலிக்கப்பட்டவாறு, 2024 யூன் இறுதியில் அதன் வரலாற்றுச் சராசரியுடன் ஒப்பிடும் போது உயர்வாகக் காணப்படுகின்றது. இது, எதிர்வரும் காலத்தில் சந்தை கடன்வழங்கல் வட்டி வீதங்கள் குறைவடைய மேலும் இடம் காணப்படுவதை குறிக்கின்றது. மேலும், ஒட்டுமொத்த சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி கடன்வழங்கல் வட்டி வீதங்களில் ஏற்பட்ட குறைப்பானது முக்கியமாக பாரிய கடன்பெறுகைகளினால் தூண்டப்பட்டுள்ளது. சொற்பளவிலான/சிறிதளவிலான கடன்பாட்டாளர்களின் நன்மைக்காக தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளின் ஊடுகடத்தல் நிறைவுபெறவில்லை என்பதை இதுவும் எடுத்துக்காட்டுகின்றது.

**வரைபடம் 13: தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**அட்டவணை 04: தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்கள்**

*ஆண்டொன்றிற்கான சதவீதம்*


| வீதம் | 2023 இறுதி | 2024 யூன் இறுதி | மாற்றம் (% புள்ளிகள்) |
|---|---|---|---|
| சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் | 9.24 | 8.75 | -0.49 |
| சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன் வழங்கல் வீதம் (கிழமை) | 12.13 | 8.78 | -3.35 |
| 364-நாள் திறைசேரி உண்டியல் | 12.93 | 10.31 | -2.62 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம் | 14.21 | 12.47 | -1.74 |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 11.64 | 8.38 | -3.26 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 11.06 | 7.24 | -3.82 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன் வழங்கல் வீதம் | 14.38 | 11.45 | -2.93 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி கடன்வழங்கல் வீதம் | 14.96 | 12.25 | -2.71 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

பொதுவாக, தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகள், படுகடன் மறுசீரமைத்தல் உபாயத்துடனான குறைந்துவரும் நிச்சயமற்றதன்மை, மேம்படுத்தப்பட்ட சந்தை மனோபாவங்கள், மற்றும் குறைவடைந்த ஏல அளவுகள் என்பனவற்றிற்கு இணங்க அரசப் பிணையங்கள் மீதான விளைவுகள் சராசரியளவில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. எனினும், 2024 யூன் பிற்பகுதியில், விளைவுகள் பாரிய ஏல அளவுகளினால் முக்கியமாக தூண்டப்பட்டு தற்காலிக உயர்வொன்றைக் காண்பித்தது. இதற்கமைய, 2024ஆம் ஆண்டு யூலை 17 வரையான காலப்பகுதியில் திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவுகளின் ஒட்டுமொத்த குறைப்பானது 2.86 – 4.96 சதவீதப் புள்ளிகளைக் கொண்ட வீச்சில் காணப்பட்டது.

பெயரளவிலான சந்தை வட்டி வீதங்கள் கீழ்நோக்கி சீராக்கப்பட்டபோதிலும், நிலவுகின்ற குறைந்தளவான பணவீக்க மட்டங்களுக்கு மத்தியில், உண்மை வட்டி வீதங்கள் தொடர்ந்தும் உயர்ந்தளவானதும் நேர்மறையானதாகவும் காணப்படுகின்றன.

**வரைபடம் 14: அவதானிக்கப்பட்ட உண்மை வட்டி வீதங்கள்**




*குறிப்பு: ஆண்டிற்கு ஆண்டு முதன்மைப் பணவீக்க வீதத்திற்கான பெயரளவு வட்டி வீதத்தைச் சீராக்குவதன் மூலம் மாதாந்த உண்மை வட்டி வீதம் அடையப்பெற்றுள்ளது (கொ.நு.வி.சு அடிப்படையாகக் கொண்டது)*


மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உள்நாட்டுப் பணச் சந்தை திரவத்தன்மை**

***உள்நாட்டுப் பணச் சந்தையிலுள்ள திரவத்தன்மை நிலைமைகள் 2024ஆம் ஆண்டில் மேம்பட்டன.***

2024ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில், குறிப்பாக ஏப்பிறலிலிருந்து, பிரதானமாக மத்திய வங்கியின் வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல்வாங்கல்களினூடாக ஏற்பட்ட திரவத்தன்மை உட்செலுத்தல்கள் காரணமாக உள்நாட்டுப் பணச் சந்தையின் திரவத்தன்மையானது நிலைபெறத்தக்க அடிப்படையில் மிகையான மட்டங்களுக்கு திரும்பி மேம்பாடொன்றைப் பதிவுசெய்துள்ளது. மேம்பட்ட திரவத்தன்மை மட்டங்கள் மற்றும் உள்நாட்டு பணச் சந்தை நடவடிக்கைகளை கருத்திற்கொண்டு, மத்திய வங்கியின் துணைநில் வசதிகளின் பயன்பாடு தொடர்பில் விதிக்கப்பட்ட வரையறைகள் 2024 பெப்புருவரியில் தளர்த்தப்பட்டு, 2024 ஏப்பிறலில் முற்றுமுழுதாக நீக்கப்பட்டன. மேலும், 2024 மே மற்றும் யூனின் ஆரம்பத்தில், நேர்மாற்று மீள்கொள்வனவு ஏலங்களை நடத்துவது கணிசமாக குறைக்கப்பட்டது. எனினும், 2024 யூலையின் ஆரம்பத்தில், உள்நாட்டு பணச் சந்தையின் மிகை திரவத்தன்மை மட்டங்கள் (ஓரிரவு மற்றும் கட்டமைப்பு) 2024 மேயில் அவதானிக்கப்பட்ட சராசரி மட்டங்களுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியடைந்தமைக்கு, முக்கியமாக மத்திய வங்கியின் வசமிருந்த அரசப் பிணையங்களின் முதிர்ச்சிகளும் மத்திய வங்கிக்கான அரசப் பிணையங்கள் மீதான கூப்பன் கொடுப்பனவுகளும் காரணங்களாக அமைந்தன. இவ்வீழ்ச்சியானது குறுகிய கால சந்தை வட்டி வீதங்கள் மீதான சில மேல்நோக்கிய அழுத்தத்தை ஏற்படுத்தியது. எனவே, திரவத்தன்மை கிடைப்பனவிற்கான நிச்சயத்தன்மையை வழங்கி, தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைக்கமைவாக பணச் சந்தை வீதங்களில் கீழ்நோக்கிய சீராக்கத்தைத் தூண்டுவதற்கு, மத்திய வங்கி திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் மூலம் திரவத்தன்மையை உட்செலுத்தியது. ஒட்டுமொத்த மிகைக்கு மத்தியில், உள்நாட்டு பணச் சந்தையிலுள்ள திரவத்தன்மை விநியோகமானது பங்கேற்பு நிறுவனங்களிடையே சமச்சீரற்றதாக காணப்படுகின்றது.

**வரைபடம் 15: ஓரிரவு திரவத்தன்மை, முக்கிய கொள்கை வட்டி வீதங்கள் மற்றும் சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீத நடத்தை**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாடு மற்றும் மேம்பட்ட உள்நாட்டு பணச் சந்தை திரவத்தன்மை நிலைமைகள் காரணமாக துணைநில் வீத


வீச்சின் குறைந்த எல்லைக்கு அண்மையில் தொடர்ந்துமிருந்தது. இதற்கமைய, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதம் 2024 யூலை 23இல் 8.76 சதவீதமாகக் காணப்பட்டது[11].

**உள்நாட்டு கொடுகடன் நிலைமைகள் மற்றும் பண நிரம்பல்**

***தனியார் துறை கொடுகடனின் படிப்படியான ஏற்றமும் வங்கித்தொழிலின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கமும் 2024இன் இதுவரையான காலப்பகுதியில் விரிந்த பணத்தில் ($M_{2b}$) தொடர்ந்த விரிவாக்கத்திற்கு ஆதரவளித்தன.***

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட தனியார் துறைக்கான கொடுகடன் 2024இன் தொடக்கத்தில் சீரற்றதாக காணப்பட்ட அதேவேளை, 2024 மே மற்றும் யூனில் கொடுகடனில் குறிப்பிடத்தக்க விரிவாக்கம் பதிவுசெய்யப்பட்டது. தனியார் துறைக்கான கொடுகடனானது 2024ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் ஏறத்தாழ ரூ. 146 பில்லியனால் விரிவடைந்து 2024 யூன் இறுதியில் 6.2 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது. கொடுகடன் விரிவாக்கமானது பாரியளவில் நுகர்வினை சார்ந்ததாக காணப்பட்ட அதேவேளை பொருளாதாரத்தின் ஏனைய துறைகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடனில் மேம்பாடொன்றும் அவதானிக்கப்பட்டது. 2024ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் தனியார் துறை கொடுகடனின் மெதுவான விரிவாக்கத்திற்கு, தெரிவுசெய்யப்பட்ட சில்லறை கடன்வழங்கல் உற்பத்திகள் மீதான வட்டி வீதங்கள் ஓப்பீட்டளவில் உயர்வாக காணப்படுவது பொருளாதாரத்தில் கொடுகடனுக்கான குறைவான கேள்விக்கு பகுதியளவில் பங்களித்த அதேவேளை, குறிப்பாக சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சி துறைக்கு கடன்வழங்குதலுடன் தொடர்புடைய உயர்ந்தளவான இடர்நேர்வு மிகை போன்ற கொடுகடன் நிரம்பல் பக்கம் மீதான மீதான கட்டுப்பாடுகளும் இதற்கு பங்களிப்புச் செய்தது.

**வரைபடம் 16: உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் தனியார் துறைக்கான கொடுகடனின் மாதாந்த மாற்றம்**




*குறிப்பு: 2022 மாச்சு - மே வரையான காலப்பகுதியில் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் குறிப்பிடத்தக்க தேய்மானம், அக்காலப்பகுதியில் நாணய மற்றும் கொடுகடன் கூட்டுக்களின் குறிப்பிடத்தக்க விரிவாக்கத்திற்கு முக்கியமாகப் பங்களித்தது.*


மூலம்: இலங்கை மத்திய வங்கி

வங்கித்தொழில் முறைமையினால் அரசிற்கான தேறிய கொடுகடனானது 2024ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் சுருக்கமடைந்ததற்கு மத்திய வங்கியினால் அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட

[11] 2024 யூலை 24 அன்று கொள்கை வட்டி வீதங்களின் 25 அடிப்படைப் புள்ளிகள் குறைப்புடன், சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்புப் பண வீதமானது மேலும் குறைவடைந்து, 2024 யூலை இறுதியளவில் 8.55 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது.

சுருக்கம் பிரதான காரணமாக அமைந்த அதேவேளை உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பானது, அவற்றின் அரசப் பிணைய முதலீடுகளில் ஏற்பட்ட அதிகரிப்பைப் பிரதிபலித்தது. 2024ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் மத்திய வங்கியினால் அரசிற்கான தேறிய கொடுகடன் குறைக்கப்பட்டமைக்கு திறைசேரி உண்டியல்களின் முதிர்ச்சியும் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் துணைநில் கடன்வழங்கல் வசதியின் பயன்பாட்டில் ஏற்பட்ட குறைப்பும் காரணங்களாக அமைந்தன.

**வரைபடம் 17: அரச பிணையங்களின் மத்திய வங்கியின் உடமைகள் (முகப் பெறுமதியில் மாதாந்த மாற்றம்)**




*இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 129(2)ஆம் பிரிவிற்கிணங்க திறைசேரி முறிகளுக்கு அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநின்ற தற்காலிக முற்பணங்களை மாற்றுதல் உள்ளடக்கப்படுகின்றது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

2024ஆம் ஆண்டின் முதலரைப்பகுதியில், உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினால் அரசிற்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு வழங்கப்பட்ட கொடுகடன் சுருக்கமடைந்தமைக்கு அக்காலப்பகுதியில் பதிவுசெய்யப்பட்ட நாணய உயர்வின் மதிப்பீட்டுத் தாக்கம் மற்றும் முக்கிய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் மேற்கொள்ளப்பட்ட தேறிய மீள்கொடுப்பனவுகள் என்பன காரணங்களாக அமைந்தன.

வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 2024ஆம் ஆண்டின் முதலரைப் பகுதியில் குறிப்படத்தக்களவில் மேம்பட்டதுடன் 2020 ஏப்பிறலின் பின்னர் முதன்முதலாக சாதகமான நிலையை பதிவு செய்தது. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் மேம்படுவதற்கு வெளிநாட்டுச் சொத்துக்களின் அதிகரிப்பும் வதிவற்றோருக்கு வெளிநாட்டு நாணய வெளிப்படுத்துகைளை தீர்ப்பனவு செய்தமையும் காரணங்களாக அமைந்தன. மேம்பட்ட வெளிநாட்டுத் துறை செயலாற்றத்திற்கு மத்தியில் உள்நாட்டு வெளிநாட்டு செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியின் தேறிய கொள்வனவினூடாக மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் அதிகரிக்கப்பட்டு, மேம்பட்ட ஒட்டுமொத்த அலுவலர்சார் ஒதுக்குகளுக்கு வழிவகுத்தன.

இவ் அபிவிருத்திகள் மற்றும் தளர்த்தப்பட்ட நாணய நிலைமைகளுக்கமைவாக, விரிந்த பணம் ($M_{2b}$) தொடர்ந்தும் விரிவடைந்து, 2024 யூன் இறுதியில், 9.8 சதவீதம் கொண்ட ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தது.

### அட்டவணை 05: விரிந்த பணத்தின் ($M_{2b}$) கூறுகள்


| | | 2022 | 2023 | 2024 | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | சன | பெப் | மாச் | ஏப் | மே | யூன் | அரையாண்டு1 |
| தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் | மாற்றம் (ரூ.பில்) | -784.8 | 1,310.7 | 56.1 | 79.7 | 148.1 | 119.3 | 146.8 | 86.3 | 636.3 |
| அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடன் | மாற்றம் (ரூ.பில்) | 1,638.7 | 813.9(அ) | 50.1 | -18.1 | -60.4 | -26.2 | -75.8 | -65.6 | -196.1 |
| அரசிற்கு சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான கொடுகடன் | மாற்றம் (ரூ.பில்) | 561.6 | -979.9 (அ) | -22.8 | -14.0 | -19.8 | -11.8 | -0.2 | 8.2 | -60.4 |
| தனியார் துறைக்கான கொடுகடன் | மாற்றம் (ரூ.பில்) | 430.0 | -45.0 | -52.2 | 7.3 | 71.9 | -16.2 | 60.7 | 74.5 | 145.9 |
| | ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி (%) | 6.2 | -0.6 | -0.02 | 0.9 | 3.6 | 4.1 | 6.3 | 6.2 | |
| விரிந்த பண நிரம்பல் ($M_{2b}$) | மாற்றம் (ரூ.பில்) | 1,642.3 | 899.5 | -74.2 | 86.2 | 123.5 | 95.4 | 196.4 | 131.5 | 558.8 |
| | ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சி (%) | 15.4 | 7.3 | 6.4 | 6.9 | 8.4 | 8.3 | 10.6 | 9.8 | |

(அ) 30 சனவரி 2023 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் ஒப்புதலுடன் திசெம்பர் 2022 தொடக்கம் செயற்படத்தக்கவாறு இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்ததின் வெளிநின்ற வெளிநாட்டு நாணய உத்தரவாதப் படுகடன் மத்திய அரசாங்க படுகடனிற்குள் உள்ளீர்க்கப்பட்டது. இதன்படி, இச்சீராக்கத்தின் ஒரு பகுதி 2023 ஏப்பிறலிலும் அதனைத்தொடர்ந்து 2023 திசெம்பரிலும் என்றவாறு இரண்டு கட்டங்களில் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் குறித்த அரசிற்குச் சொந்தமான வர்த்தக வங்கியின் ஐந்தொகையில் இது பிரதிபலிக்கப்பட்டது. மேலும், இது அரச கூட்டுத்தாபனங்கள்/அரசிற்குச் சொந்தமான வியாபாரத் தொழில்முயற்சிகளிற்கான கொடுகடனில் குறைப்பொன்றினையும் அரசாங்கத்திற்கான தேறிய கொடுகடனில் தொடர்புடைய விரிவாக்கமொன்றினையும் தோற்றுவித்தது.

குறிப்பு: ஆண்டிற்கான மாற்றங்கள் 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதே வேளையில் மாதாந்த மாற்றங்கள் 2024 சனவரி – யூன் நெடுவரிசைகளில் வழங்கப்பட்டுள்ளன. 2024இன் முதலரைப் பகுதியிலான மாற்றம் இறுதி நெடுவரிசையிலுள்ளது.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

### வரைபடம் 18: விரிந்த பணத்தின் ($M_{2b}$) ஆண்டிற்கு ஆண்டு வளர்ச்சிக்கான பங்களிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி


### 3.4. வெளிநாட்டுத் துறை


***2024இன் முதற்காலாண்டில் மிகையொன்று பதிவுசெய்யப்பட்ட நடைமுறைக் கணக்குடன் 2024இன் இதுவரையிலான காலப்பகுதியில் வெளிநாட்டுத் துறையில் நேர்மறையான உத்வேகம் அவதானிக்கப்பட்டது. இதன்விளைவாக, உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகள் மேம்பட்டு, ஆண்டின் பிற்பகுதியில் ஏற்பட்ட சில தேய்மான அழுத்தத்திற்கிடையில் 2024இன் முதலரைப்பகுதியில் இலங்கை ரூபாவில் உயர்வடைதலொன்று தோற்றுவிக்கப்பட்டது.***

**சென்மதி நிலுவைகள்**

நடைமுறைக் கணக்கு 2024இன் முதற்காலாண்டில் ஐ.அ.டொலர் 706 மில்லியன் கொண்ட மிகையொன்றை பதிவுசெய்தது. வர்த்தக மற்றும் முதலாந்தர வருமானக் கணக்குப் பற்றாக்குறைகளின் விரிவாக்கத்திற்கு மத்தியில் பணிகள் ஏற்றுமதிகள் மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்பிலான குறிப்பிடத்தக்க உட்பாய்ச்சல்களினால் இது ஆதரவளிக்கப்பட்டது. 2024இன் முதலரைப்பகுதியில் வர்த்தகப் பற்றாக்குறையானது ஐ.அ.டொலர் 2.5 பில்லியனுக்கு விரிவடைந்தது. ஏற்றுமதி வருவாய்களும் இறக்குமதி செலவினமும் கருத்திற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் 2023இன் தொடர்புடைய காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் அதிகரித்தன. வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் வளர்ச்சியானது ஏனையவற்றுக்கிடையில் முக்கியமாக, பெற்றோலிய உற்பத்திகள், உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை, இறப்பர் உற்பத்திகள், மற்றும் தேயிலை போன்ற ஏற்றுமதியிலிருந்தான உயர்ந்தளவான வருவாய்களால் தூண்டப்பட்டது. வணிகப்பொருள் இறக்குமதிகளின் அதிகரிப்பிற்கு ஏனையவற்றுக்கிடையில் முக்கியமாக பொறி மற்றும் கருவிகள், புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள், மற்றும் கட்டடப் பொருட்கள் போன்ற உயர்ந்தளவிலான இறக்குமதிகள் காரணமாயமைந்தன. நுகர்வோர் கேள்வியில் எதிர்பார்க்கப்பட்ட அதிகரிப்பு மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகளின் படிப்படியான தளர்த்தல் என்பனவற்றுடன் ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியை நோக்கி வர்த்தகப் பற்றாக்குறை விரிவடைவதற்கான வாய்ப்பொன்றுள்ளது.

**வரைபடம் 19: வர்த்தக கணக்கு**





மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
இலங்கைச் சுங்கம்

பணிகள் கணக்கில், 2024இன் முதலரைப்பகுதியில் ஒரு மில்லியனை விஞ்சிய சுற்றுலாப் பயணிகளின் வருகையுடன் சுற்றுலாத் துறையிலிருந்தான வருவாய்கள் குறிப்பிடத்தக்களவில் மேம்பட்டன. கடல் போக்குவரத்துப் பணிகள், கணினிப் பணிகள் மற்றும் தொழில்நுட்ப, வர்த்தகம் தொடர்பான மற்றும் ஏனைய வியாபாரப் பணிகள் போன்ற ஏனைய துறைகளுக்கான பணிகள் உட்பாய்ச்சல்களும் 2024இன் முதலரைப்பகுதியில் வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தன. அதேவேளை, தொழிலாளர் பணுவனுப்பல்கள் 2024இன் முதலரைப்பகுதியில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்தன. பணிகள் துறை மற்றும் தொழிலாளர் பணவனுப்பல்கள் ஆகிய இரண்டிற்கான உட்பாய்ச்சல்கள் 2024இன் இரண்டாம் அரைப்பகுதியில் தொடர்ந்தும் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்பட்டு, வர்த்தகப் பற்றாக்குறையின் ஏதேனும் எதிர்பார்க்கப்பட்ட விரிவாக்கத்தைத் தணிப்பதற்கு உதவுகின்றது.


**வரைபடம் 20: தொழிலாளர் பணவனுப்பல்கள் மற்றும் சுற்றுலா வருவாய்கள்**




மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி
உரிமம் பெற்ற வங்கிகள்

*மூலங்கள்:* இலங்கை மத்திய வங்கி
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை


**வரைபடம் 21: நடைமுறைக் கணக்கு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

ஆண்டின் முதலரைப்பகுதியில் நிதியியல் கணக்கின் செயலாற்றமானது குறைக்கப்பட்டிருந்தது. 2024இன் முதற்காலாண்டில் வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் பலவீனமாகக் காணப்பட்டன. அரசப் பிணையங்கள் சந்தையில் மொத்த வெளிநாட்டு முதலீடுகள் தேறிய வெளிப்பாய்ச்சல்களைப் பதிவுசெய்தன. வெளிநின்ற அரசப் பிணையங்களின் எஞ்சிய வதிவற்ற உடைமைகள் தற்போது புறக்கணிக்கத்தக்க மட்டங்களில் காணப்படுகின்றன. அதேவேளை, முதலாந்தர மற்றும் இரண்டாந்தர சந்தை கொடுக்கல்வாங்கல்கள் உள்ளடங்கலாக கொழும்பு பங்குப் பரிவர்த்தனைக்கான வெளிநாட்டு முதலீட்டு உட்பாய்ச்சல்கள் 2024இன் முதலரைப்பகுதியில் சிறிதளவிலான தேறிய உட்பாய்ச்சலொன்றைப் பதிவுசெய்தன.

**வரைபடம் 22: நிதியியல் கணக்கு**





மூலம்: இலங்கை மத்திய வங்கி

**செலாவணி வீதம்**

2024 மே மற்றும் யூனில் ஏற்பட்ட சில தேய்மான அழுத்தத்திற்கு மத்தியில், 2023இன் பிற்பகுதியிலிருந்து அவதானிக்கப்பட்ட இலங்கை ரூபாவின் உயர்வடையும் போக்கானது 2024இன் இதுவரையிலான காலப்பகுதியில் தொடர்ந்தது. தொழிலாளர் பணவனுப்பல்களிலிருந்தான உயர்ந்தளவான வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்கள், அதிகரித்த பணிகள் ஏற்றுமதிகள் மற்றும் வணிகப்பொருள் ஏற்றுமதியாளர்களின் மூலமான பெறுகைகளின் மாற்றல்கள், அத்துடன் சந்தை மனோபாவங்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான முன்னேற்றங்களுடன் 2024இன் முதலரைப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் திரவத்தன்மை நிலைமைகள் மேம்பட்டன. 2024 யூலை 23 வரையான ஆண்டுகாலப்பகுதியில், இலங்கை ரூபாய் ஐ.அ.டொலருக்கெதிராக 6.6 சதவீதம் கொண்ட ஒட்டுமொத்த உயர்வடைதலொன்றைப் பதிவுசெய்தது. எனினும், அதிகரிக்கப்பட்ட இறக்குமதிகள் மற்றும் அரசப் பிணையங்கள் சந்தையிலிருந்து தேறிய வெளிப்பாய்ச்சல்கள் என்பனவற்றின் முக்கிய காரணமாக 2024 மே மற்றும் யூனில் சில தேய்மான அழுத்தங்கள் அவதானிக்கப்பட்டதுடன் நாளுக்குள்ளேயான தளம்பல்களை தணிக்கும் வகையில் குறித்த நாட்களில் வெளிநாட்டு செலாவணியைச் சந்தைக்கு வழங்குவதற்கு மத்திய வங்கியைத் தேவைப்படுத்தியது. அதேவேளை, குறுக்கு நாணய அசைவுகளைப் பிரதிபலிக்கும் வகையில், 2024 யூலை 23 வரையான காலப்பகுதியில், இலங்கை ரூபாவானது யூரோ, ஸ்ரேலிங் பவுன், சீன யுவான், யப்பானிய யென், இந்திய ரூபாய், மற்றும் அவுஸ்திரேலிய டொலர் போன்ற முக்கிய நாணயங்களுக்கு எதிராக தேய்வடைந்தது.

**வரைபடம் 23: செலாவணி வீத அசைவுகள்**






மூலம்: இலங்கை மத்திய வங்கி

**ஒதுக்குச் சொத்துக்கள்**

2024இன் முதலரைப்பகுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் மேம்பட்டு, வெளிநாட்டுத் துறையில் சாதகமான அபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்றது. மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 2023 இறுதியில் காணப்பட்ட ஐ.அ.டொலர் 4.4 பில்லியனிலிருந்து 2024 யூன் இறுதியில் ஐ.அ.டொலர் 5.7 பில்லியனிற்கு அதிகரித்தன. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளானது பயன்படுத்தக்கூடிய தன்மை தொடர்பிலான நிபந்தனைகளுக்குட்பட்ட சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதியினை உள்ளடக்குகின்றன. மொத்த அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பானது முக்கியமாக 2024இன் முதலரைப்பகுதியில் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து ஐ.அ.டொலர் 1.8 பில்லியன் தொகையான (வர்த்தகத் திகதியை அடிப்படையாகக் கொண்டு) மத்திய வங்கியின் தேறிய கொள்வனவுகள் மற்றும் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி ஏற்பாட்டின் கீழ் இரண்டாம் மீளாய்வினை நிறைவுசெய்ததைத் தொடர்ந்து பன்னாட்டு நாணய நிதியத்திடமிருந்து ஏறத்தாழ ஐ.அ.டொலர் 336 மில்லியன் கிடைப்பனவு என்பனவற்றால் ஆதரவளிக்கப்பட்டது. அதேவேளை, மொத்த அலுவல்சார் ஒதுக்குகளின் இறக்குமதி உள்ளடக்கம் (சீன மக்கள் வங்கியிடமிருந்தான பரஸ்பர பரிமாற்றல் வசதி உள்ளடங்கலாக) 2024 யூன் இறுதியிலுள்ளவாறு 3.9 இறக்குமதி மாதங்களாகக் காணப்பட்டது.

**வரைபடம் 24: மாதாந்த மொத்த அலுவல்சார் ஒதுக்குகள், ஒதுக்கு போதுமாந்தன்மை மற்றும் தேறிய உள்ளீர்ப்பு**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### 3.5. இறைத் துறை[12]

***அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட வலுவான அரசிறையை அடிப்படையாகக் கொண்ட இறைத் திரட்சி வழிமுறைகளின் காரணமாக, 2024 மேயில் முடிவடைகின்ற ஐந்து மாத காலப்பகுதியில் இறைத் துறைச் செயலாற்றம் தொடர்ந்தும் முன்னேற்றமடைந்தது. இத்தகைய வழிமுறைகள் கணிசமான ஆரம்ப மீதி மிகைக்கும் குறைவடைந்த ஒட்டுமொத்த வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறைக்கும் வழிவகுத்தது.***


2024 மேயில் முடிவடைகின்ற ஐந்து மாதக் காலப்பகுதியில் தொடர்ச்சியான வலுவான இறைத் திரட்சி வழிமுறைகளானது அனைத்து முக்கிய இறை மீதிகளையும் அதாவது, ஒட்டுமொத்த இறை மீதி, நடைமுறைக் கணக்கு மீதி மற்றும் ஆரம்ப மீதி என்பவற்றையும் பெயரளவு நியதிகளிலும் எறிவுசெய்யப்பட்ட மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகவும் முன்னேற்றமடையச் செய்துள்ளது. 2024 மேயில் முடிவடைகின்ற ஐந்து மாதக் காலப்பகுதியில், அரசாங்கத்தின் மொத்த அரசிறை மற்றும் கொடைகள் 2023இன் அதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் கணிசமாக அதிகரித்தன. இவ்வதிகரிப்பானது முக்கியமாக பெறுமதி சேர்க்கப்பட்ட வரியிலிருந்தான அதிகளவிலான வரி வருமானங்களாலும் காலால் தீர்வைகளாலும் தூண்டப்பட்டதுடன் இத்தகைய விடயப்பரப்புகளின் மீதான அண்மைய சீர்திருத்தங்களால் பங்களிப்புச்செய்யப்பட்டது. மேலும், 2024இன் முதல் ஐந்து மாத காலப்பகுதியில் வளர்ந்துவரும் பொருளாதார நடவடிக்கையின் காரணமாகவும் அதேபோன்று வருமான வரிகளுக்கான தொழில்சார்நிபுணர்களின் கட்டாய பதிவுகள் போன்ற முன்னேற்றமடைந்த வரி நிர்வாக ஏற்பாடுகளின் காரணமாகவும் அதிகரித்த வரித் தளமானது 2023இன் அதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வருமான வரிச் சேகரிப்பின் அதிகரிப்புக்கு பங்களிப்புச்செய்தது. அதேபோன்று, தளர்வடைந்த இறக்குமதி கட்டுப்பாடுகள் ஆய்விற்குரிய காலப்பகுதியில் இறக்குமதி வரி அதிகரிப்பிற்குப் பங்களிப்புச்செய்தன. வரி வருமானச் சேகரிப்பின் கணிசமான அதிகரிப்பானது வரி நிர்வாகத்தையும் அரசிறை சேகரிப்பு முகவராண்மைகளில் நிறுவன ரீதியான சீர்திருத்தங்களையும் மேம்படுத்துவதற்கான வழிமுறைகளை

[12] 2024 மே வரை மாத்திரமே இறைத் தரவுகள் கிடைப்பனவாக காணப்பட்டன.

துரிதமாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் மேலும் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவை, நடுத்தர காலத்தில், இத்தகைய அரசிறை வளர்ச்சியின் உத்வேகத்தை நிலைத்திருக்கச் செய்வதற்கு முக்கியமானதாக காணப்படுகின்றன. 2024 மேயில் முடிவடைகின்ற ஐந்து மாதக் காலப்பகுதியில், வட்டிகள், இலாபங்கள், பங்குலாபங்கள் அத்துடன் விற்பனைகள் மற்றும் அறவீடுகள் என்பவற்றிலிருந்து அதிகரித்த பெறுகைகளின் காரணமாக வரியல்லா வருமானமும் வளர்ச்சியடைந்தது.

முன்னைய வருடத்துடன் ஒப்பிடுகையில், 2024 மேயில் முடிவடைந்த ஐந்து மாதக் காலப்பகுதியில், குறைவடைந்த வட்டிச் செலவினத்தின் காரணமாக, ஒட்டுமொத்த மொத்த செலவினம் சிறிதளவு குறைப்புடன் கட்டுக்குள் வைக்கப்பட்டது. ஒட்டுமொத்த செலவினத்தில் பாரியளவான பங்கிற்கு பங்களிப்புச்செய்த வட்டிச் செலவினம் அரசாங்கப் பிணையங்கள் மீதான விளைவு வீதங்களிலுள்ள குறைப்பினால் உந்தப்பட்டு வீழ்ச்சியடைந்தது. இதற்கு மேலதிகமாக, மூலதனச் செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கல் என்பன 2023இன் அதையொத்த காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஆய்விற்குரிய காலப்பகுதியில் சிறிதளவில் குறைவடைந்தன.

**வரைபடம் 25: முக்கிய இறை மீதிகள்**




மூலம்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

2024 மே இறுதியில் முடிவடைந்த ஐந்து மாத காலப்பகுதியில், அரசாங்கமானது தொடர்ந்துசெல்லும் படுகடன் இடைநிறுத்தப்பட்ட நிலைமையின் காரணமாக பன்னாட்டு மூலதனச் சந்தைகளை அணுகுவதன் மீது காணப்படும் வரையறையினால் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறையை பூர்த்தி செய்வதற்கு முக்கியமாக உள்நாட்டு மூலங்களில் தொடர்ச்சியாக தங்கியிருந்தது. அதேவேளை, 2024 மே இறுதியில் உள்நாட்டுப் படுகடன் இருப்பு அதிகரித்த போதும், வெளிநின்ற மத்திய அரசு படுகடன் 2023இன் இறுதியின் ஐ.அ.டொலருக்கெதிராக இலங்கை ரூபாவின் பெறுமானத்தேய்வின் விளைவாக வெளிநாட்டுப் படுகடன் இருப்பின் பெறுமதியில் ஏற்பட்ட குறைப்பின் காரணமாக 2024 மே இறுதியளவில் ரூபா நியதிகளில் வெளிநின்ற மத்திய அரசாங்க படுகடன்[13] குறைவடைந்தது.

[13] இலங்கையின் வெளிநாட்டு பொதுப் படுகடன் பணிக்கொடுப்பனவுகள் தொடர்பில் 2022 ஏப்பிறல் 12 அன்று நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட இடைக்கால கொள்கை அறிவிப்பின் பின்னர் நிலுவையிலுள்ள பல்வேறு படுகடன் பணிக் கொடுப்பனவுகளை வெளிநின்ற மத்திய அரச படுகடன் உள்ளடக்கவில்லை. இப்படுகடன் பணிக் கொடுப்பனவுகள் பாதிக்கப்பட்ட படுகடனின் நிலுவையிலுள்ள வட்டிக் கொடுப்பனவுகளினை உள்ளடக்கியுள்ளதுடன் இடைக்காலக் கொள்கையின் பிரகாரம் இவ்வட்டிக் கொடுப்பனவுகள் மூலதனமாக்கப்பட வேண்டுமெனக் கருதப்படுகின்றது

உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்துகை நிகழ்ச்சித்திட்டத்தின் வெற்றிகரமான நிறைவைத் தொடர்ந்து, அரசாங்கமானது 2024 யூனில் அலுவல்சார் கொடுகடன் குழு, சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி என்பவற்றுடன் இணைந்து ஐ.அ.டொலர் 10 பில்லியனுக்கான இருபுடை படுகடன் மீள்கட்டமைப்பு உடன்படிக்கையை உறுதிசெய்ததுடன் மறுசீரமைப்பு நாட்டிற்கான பன்னாட்டு முறிகள் தொடர்பில் முறி உடமையாளர்களின் தற்காலிக குழுக்களுடன் இணைந்து முன்னேற்றத்தைக் கொண்டுவந்தது. படுகடன் மறுசீரமைப்பை முன்கூட்டியே நிறைவடையச்செய்தலானது இலங்கையின் இறை உறுதித்தன்மையினை மேம்படுத்தி, முதலீட்டாளர் நம்பிக்கையை உயர்த்தி, எதிர்கால பொருளாதார வளர்ச்சிக்கான நிலையான அடித்தளத்தை வழங்கும்.

**அட்டவணை 06: இறைச் செயலாற்றம்: சனவரி – மே 2024**

*ரூ.பில்லியன்*

| விடயம் | 2023 (அ) | 2023 சன-மே | 2024 சன-மே | 2024 சன-மே / 2023 சன-மே வளர்ச்சி (%) |
|---|---|---|---|---|
| **மொத்த அரசிறை மற்றும் கொடைகள்** | **3,074.3** | **1,122.4** | **1,619.2** | **44.3** |
| மொத்த அரசிறை | 3,048.8 | 1,120.6 | 1,616.8 | 44.3 |
| வரி அரசிறை | 2,720.6 | 1,029.4 | 1,491.2 | 44.9 |
| வரியல்லா அரசிறை | 328.3 | 91.2 | 125.5 | 37.6 |
| கொடைகள் | 25.5 | 1.8 | 2.5 | 36.8 |
| **மொத்தச் செலவினம்** | **5,356.6** | **2,137.1** | **1,986.0** | **-7.1** |
| மீண்டெழும் செலவினம் | 4,699.7 | 1,937.9 | 1,792.8 | -7.5 |
| மூலதனம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | 656.9 | 199.2 | 193.2 | -3.0 |
| **நடைமுறைக் கணக்கு மீதி** | **-1,650.9** | **-817.3** | **-176.0** | |
| **ஆரம்ப மீதி** | **173.3** | **47.4** | **554.2** | |
| **ஒட்டுமொத்த வரவுசெலவுத் திட்ட மீதி** | **-2,282.3** | **-1,014.7** | **-366.8** | |
| **மொத்த நிதியிடல்** | **2,282.3** | **1,014.7** | **366.8** | |
| வெளிநாட்டு நிதியிடல் | 494.7 | -63.3 | -27.6 | |
| உள்நாட்டு நிதியிடல் | 1,787.6 | 1,078.0 | 394.4 | |
| | 2023 இறுதி | 2023 மே இறுதி | 2024 மே இறுதி | |
| **மத்திய அரச வெளிநாட்டுப் படுகடன் (ஆ)** | **28,695.9** | **26,080.1** | **28,062.8** | |
| உள்நாடு | 17,051.9 | 15,671.3 | 17,349.5 | |
| வெளிநாடு | 11,644.1 | 10,409.3 | 10,713.3 | |

(அ) தற்காலிகமானது

(ஆ) 2022 ஏப்பிறல் 12இன் பின்னர் செலுத்தவேண்டியதாகக் காணப்பட்ட பல்வேறு படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளை வெளிநின்ற மத்திய அரசப் படுகடன் நீக்குகின்றதுடன், இலங்கையின் வெளிநாட்டுப் பொதுப் படுகடனின் தீர்ப்பனவு தொடர்பான இடைக்கால கொள்கைத் திகதியை நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு அறிவித்திருந்தது. இத்தகைய தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் பாதிப்படைந்த படுகடனின்செலுத்தவேண்டிய வட்டிக் கொடுப்பனவுகளை உள்ளடக்குகின்றது. இது இலங்கை அபிவிருத்தி முறிகளுடன் தொடர்புடைய இடைக்கால கொள்கைகளுக்கும் பல்வேறு செலுத்தவேண்டிய வட்டிக் கொடுப்பனவுகளுக்கும் ஏற்ப மூலதனமயமாக்கப்படுகின்றது எனக் கருதப்படுகின்றது. மேலும், 2014ஆம் ஆண்டின் பன்னாட்டு நாணய நிதியம் மூலமான அரசாங்க நிதி புள்ளிவிபரங்களின் கையேட்டிற்கமைவாக வதிவிடத்தை அடிப்படையாகக்கொண்டு படுகடன் இருப்பு தயாரிக்கப்படுகின்றது (அதாவது, இலங்கை அரசாங்கத்தின் வெளிநின்ற பன்னாட்டு நாணய நிதியத்தின் வதிவிட உடமைகள் உள்நாட்டுப் படுகடனின் கீழ் வகைபடுத்தப்பட்டு வருவதுடன் வெளிநாட்டுப் படுகடனின் கீழ் இலங்கை அபிவிருத்தி முறிகளின் வதிவற்ற உடமைகள் வகைபடுத்தப்பட்டுள்ளன) என்பதுடன் தேறிய அடிப்படையொன்றில் முன்வைக்கப்படுகின்றது.


மூலம்: நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு

### 3.6. நிதியியல் துறை

***2024இன் இதுவரையான காலப்பகுதியில் பேரண்ட நிதியியல் நிலைமைகள் முன்னேற்றமடைந்த அதேவேளை கடந்த பாதகமான பேரண்ட நிதியியல் அபிவிருத்திகளின் நீடித்த விளைவுகள் தொடர்ச்சியாக சவால்களை ஏற்படுத்தியிருந்தது.***


உண்மை வருமானங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் நிலைபெறத்தக்கத் தாக்கமானது வீட்டுத்துறையினரதும் நிறுவனங்களினதும் படுகடன் மீள்கொடுப்பனவு இயலாற்றல்களைத் தடைப்படுத்தியுள்ளதுடன் நிதியியல் துறையில் கொடுகடன் இடர்நேர்வை உயர்வடையச் செய்துள்ளது. அதேவேளை, மொ.உ.உற்பத்திற்கான தனியார் துறை கொடுகடன் இடைவெளி (கொடுகடன் இடைவெளி) மூலம் பிரதிபலிக்கப்படுகின்ற கொடுகடன் சுழற்சியானது விரிவாக்க கட்டத்தினுள் நகர்ந்து செல்கின்றதென்பதைச் சமிஞ்ஞைப்படுத்தியது. தனியார் துறைக்கான கொடுகடனின் மீட்சியுடனும் தொடர்ச்சியான இறைத் திரட்சியுடனும் அரச துறைக்கான நிதியியல் நிறுவனங்களின் வெளிப்படுத்துகையில் ஏற்பட்ட சாய்வுநிலை வீழ்ச்சியடைகின்றது.

**வரைபடம் 26: மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு கொடுகடன் இடைவெளி**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**வரைபடம் 27: பொது மற்றும் தனியார் துறைகளுக்கான நிதியியல் துறை வெளிப்படுத்துகை ***




** இது வங்கித்தொழில் துறை மற்றும் உரிமம் பெற்ற நிதிக் கம்பனி என்பனவற்றின் அரச மற்றும் தனியார் துறைகளுக்கான வெளிப்படுத்துகையைப் பிரதிபலிக்கின்றது.*

மூலம்: இலங்கை மத்திய வங்கி

தளர்வடைகின்ற பேரண்டப்பொருளாதார நிலைமைகளுக்கு மத்தியில், 2024இன் முதலரைப்பகுதியில் நிதியியல் துறையின் தாக்குபிடிக்குந்தன்மையானது படிப்படியாக முன்னேற்றமடைந்தது. ஆய்விற்குரிய காலப்பகுதியில் அதிகரித்த முதலீடுகள் மற்றும் கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகளின் வளர்ச்சி என்பனவற்றின் முக்கிய காரணமாக வங்கித்தொழில் துறையின் மொத்தச் சொத்துக்கள் விரிவடைந்தன. இதற்கமைய, 2024 யூன் இறுதியில் வங்கித்தொழில் துறையின் சொத்துக்கள் 7.9 சதவீத ஆண்டுக்காண்டு வளர்ச்சியைப் பதிவுசெய்து ரூ. 20.7 றில்லியனாக விளங்கின. 2024 யூன் இறுதியில், தளர்வடைந்த நாணயக் கொள்கைக்கு மத்தியில், வங்கித்தொழில் துறையின் மொத்த கடன்கள் மற்றும் பெறத்தக்கவைகள் என்பன ஆண்டுக்காண்டு 4.8 சதவீதத்தால் விரிவடைந்தன.

2024இன் முதலரைப்பகுதியில் வங்கித்தொழில் துறையின் வரிக்குப் பின்னரான இலாபம் 2023இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வட்டிச் செலவினங்களில் ஏற்பட்ட கணிசமான குறைப்பின் முக்கிய காரணமாக அதிகரித்தது. இதற்கமைய, 2024இன் முதலாம் அரையாண்டுக் காலப்பகுதியில் வங்கித்தொழில் துறையானது 2023இன் முதலரைப்பகுதியில் ரூ. 80.5 பில்லியன் கொண்ட வரிக்குப் பின்னரான இலாபத்துடன் ஒப்பிடுகையில், ரூ. 112.2 பில்லியன் கொண்ட வரிக்குப் பின்னரான இலாபமொன்றை அறிக்கையிட்டது. கட்டம் 3 கடன்கள் விகிதத்தினூடாகப் பிரதிபலிக்கப்பட்டவாறு வங்கித்தொழில் துறையின் ஒட்டுமொத்த பணம்செலுத்தத் தவறும் இடர்நேர்வானது 2023 யூன் இறுதியின் 13.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 யூன் இறுதியில் 12.8 சதவீதமாகக் குறைவடைந்தது. 2023 யூனிலிருந்து கட்டம் 3 கடன்களில் ஏற்பட்ட வளர்ச்சியும் குறைவடைந்துள்ளதுடன் வங்கித்தொழில் துறையில் கொடுகடன் இடர்நேர்வின் நிலைபெறுந்தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

திரவத்தன்மை காப்பு விகிதங்களினாலும் தேறிய உறுதியான நிதியிடல் விகிதத்தினாலும் அளவிடப்பட்டவாறான வங்கித்தொழில்துறையின் திரவத்தன்மை நிலைமைகள் 2024 யூன் இறுதியில் முன்னைய ஆண்டின் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் கணிசமாக முன்னேற்றமடைந்தன. வங்கித்தொழில் துறையின் ரூபா திரவத்தன்மை காப்பு விகிதங்கள் 2023 யூன் இறுதியின் 276.0 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 யூன் இறுதியில் 339.9 சதவீதமாக முன்னேற்றமடைந்ததுடன் 100 சதவீதம் கொண்ட குறைந்தபட்ச ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு மேலாக விளங்கின.இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட சொத்துக்களில் அதிகரிப்பொன்று ஏற்பட்ட போதும், வங்கித்தொழில் துறையின் மூலதன போதுமாந்தன்மை விகிதமானது ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனத்தில் ஏற்பட்ட உயர்வான வளர்ச்சியின் விளைவாக 2023 யூன் இறுதியின் 16.9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 யூன் இறுதியில் 18.0 சதவீதமாக முன்னேற்றமடைந்தது. வங்கிகளின் ஒழுங்குமுறைப்படுத்தல் மூலதனமானது ஆண்டிற்காண்டு அடிப்படையொன்றில் 11.0 சதவீத குறிப்பிடத்தக்க வளர்ச்சியொன்றைப் பதிவுசெய்து சாத்தியமான இழப்புக்களை உள்ளீர்ப்பதற்கான தமது இயலாற்றலை வலுப்படுத்துகின்ற மூலதன தாங்கிருப்புக்களின் மேம்படுத்தலை எடுத்துக்காட்டியது.

2024இன் முதலரைப்பகுதியில் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் துறையானது நிதிக் குத்தகைக்குவிடுதல், அடகுவைத்தல்/ தங்கக் கடன்கள் மற்றும் தனிப்பட்ட கடன்கள் என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக அதன் கடன்கள் மற்றும் முற்பணங்கள் நிதிச்சொத்துப் பட்டியலில் 12.6 சதவீத ஆண்டிற்காண்டு விரிவாக்கமொன்றைப் பதிவுசெய்தது. துறையின் ஒட்டுமொத்த கடன்களுக்கான மொத்த கட்டம் 3 கடன்களானது 2023 யூன் இறுதியின் 20.3 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2024 யூன் இறுதியளவில் 13.6 சதவீதமாக குறைவடைந்தது செயலாற்றமற்ற கடன்களில் முன்னேற்றமொன்றை எடுத்துக்காட்டியது. துறையின் திரவத்தன்மை நிலைமையானது அரசாங்க பிணையங்களில் ஏற்பட்ட அதிகரித்த முதலீடுகளின் முக்கிய காரணமாக ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாட்டிற்கு மேலாகக் காணப்பட்டது.


அதேவேளை, பங்குரிமை மூலதனச் சந்தையானது கொழும்பு பங்கு பரிவர்த்தனையின் அனைத்து பங்கு விலைச் சுட்டெண் மற்றும் ஸ்ரான்டட் மற்றும் புவர்ஸ் இலங்கை 20 சுட்டெண் என்பன கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2024 யூன் இறுதியிலுள்ளவாறு முறையே 14.0 சதவீத்துடனும் 17.0 சதவீதத்துடனும் சாதகமான செயலாற்றமொன்றைப் பதிவுசெய்தது.

### 3.7. உலகளாவிய அபிவிருத்திகள்

***உலகளாவிய வளர்ச்சியானது உறுதிநிலைப்படுத்தப்படுவதாகப் புலப்படுகின்றபோதிலும், மெதுவடைகின்ற பணவீக்க வீழ்ச்சிக்கு மத்தியில் உலகளாவிய நாணயக் கொள்கையின் இயல்புநிலைக்குத் திரும்பலினைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மை விடாப்பிடியாயமைந்துள்ளது.***

பணவீக்கத் தோற்றப்பாட்டின் மீதான நிச்சயமற்றதன்மையினைக் கருத்திற்கொண்டு நாணயக் கொள்கைத் தளர்வடைதல் வேகமானது எதிர்பார்த்ததிலும் பார்க்க மெதுவடைந்து காணப்படுகின்றது. இருப்பினும், பொருளாதார நடவடிக்கையினை உறுதிநிலைப்படுத்தல் மற்றும் உந்துதளித்தல் என்பவற்றினை நோக்கிய அதிகரித்தளவிலான கவனஞ்செலுத்தலுடன் எதிர்வருகின்ற காலப்பகுதியில் குறிப்பாக, முக்கிய முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களின் மத்திய வங்கிகளின் மூலம் நாணயக் கொள்கை நிலைப்பாடு தளர்த்தல் மேற்கொள்ளப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. உலகப் பொருளாதாரத் தோற்றப்பாட்டின் 2024 யூலை இற்றைப்படுத்தலிற்கமைய, உலகளாவிய வளர்ச்சியானது 2024 மற்றும் 2025 ஆண்டுக்காலப்பகுதியில் நிலையாகத் தொடர்ந்தும் காணப்படும் விதத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ளவேளையில் பணிகள் பணவீக்கம் மற்றும் உயர்ந்தளவிலான பண்ட விலைகள் என்பன தொடர்பில் பணவீக்க வீழ்ச்சியின் வேகமானது 2024 மற்றும் 2025 ஆண்டுக்காலப்பகுதியில் மெதுவடைந்து காணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**வரைபடம் 28: உலகளாவிய கொள்கை வீத மாற்றங்கள்**





(அ) திருத்தப்பட்டது

மூலம்: https://www.cbrates.com

உலகளாவிய வலு மற்றும் உணவு விலைகள் நுண்ணிய கேள்வி நிரம்பல் சமநிலையொன்றினை அண்மித்துத் தொடர்ந்தும் தளம்பலடைகின்றதன்மையினைக் கொண்டுள்ளன. மத்திய கிழக்கில் தற்போது நிலவுகின்ற புவிசார் அரசியல் பதற்றங்கள் மற்றும் பொருளாதார மீட்சியினால் தூண்டப்பட்ட

வளர்ச்சியடைகின்ற உலகளாவிய கேள்வி என்பன காரணமாக உலகளாவிய வலு விலைகளிற்கான மேல்நோக்கிய இடர்நேர்வுகள் விடாப்பிடியாகக் காணப்படுகின்றன. உயர்வடைகின்ற உள்ளீட்டுச் செலவுகளும் இப்போக்கிற்குப் பங்களித்துள்ளவேளையில், வானிலையுடன் தொடர்புடைய இடையூறுகள் வலு நிரம்பல்களில் குறிப்பிடத்தக்க தளம்பலினைத் தோற்றுவிக்கக்கூடும். அதேவேளை, உலகளாவிய உணவு விலைச் சுட்டெண்ணானது தொடர்ச்சியாக மூன்று மாத உயர்வுகளைப் பதிவுசெய்ததன் பின்னர் 2024 யூனில் தொடர்ந்தும் உறுதியாகக் காணப்பட்டது.

**வரைபடம் 29: உலகளாவிய பண்ட விலைகள்**




மூலங்கள்: ராய்ட்டர்ஸ், புளூம்பர்க், சவுதி அராம்கோ

மூலம்: உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு

ISBN 978-624-5917-59-4